Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 17 வெள்ளிக்கிழமை (30.03.2012) பக்கங்கள் 20 ஓசை - 182

MADRAS CEMENTS LTD
ராம்கோ
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1325)



12795 பேருக்கு 9F

(12)



எல்லாம் ஆட்சிக்காக!

(07)



இந்தியா காலை வாரியதா?

(10)



தேசிய சின்னமாகுமா?

(16)



வேலைத் திட்டங்கள் இல்லை

(04)

## ஐ.நா.விற்குப் பதிலளிக்க

# சுதாகரிக்கிறது அரசு



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் விடயத்தில் எமது நாட்டிற்கும் சூழலுக்கும் மிகவும் பொருத்தமான பொறிமுறை ஒன்றை அரசு பின்பற்றும் என்றும் இதற்காக அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஜெனிவாத் தீர்மானம் குறித்து அரசு விரைவில் பொருத்தமான பதிலை உத்தியோக பூர்வமாக வழங்கும் என்றும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்த சரியான பொறிமுறை ஒன்று வடிவமைக்கப்பட்ட பின்னரே ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு அதன் தீர்மானம் குறித்து அரசு பதில் வழங்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை அரசாங்கம் நிராகரிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருந்த கருத்து அவரின் தனிப்பட்ட கருத்தே ஒழிய இலங்கை அரசாங்கத்தின் முடிவை அது எவ்வகையிலும் பிரதிபலிக்கவில்லை எனவும் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐ.நா.மனித உரிமைக் கவுன்ஸில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு அரசாங்கம் இதுவரை பதில் அளித்திருக்கவில்லை என்றும் அதன் உத்தியோக பூர்வ பதில் இனித்தான் தெரிவிக்கப்படும் என்றும் யாப்பா கூறினார்.

ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேறியிருந்த நிலையில், அத்தீர்மானத்தை அரசு நிராகரிக்கும் என்று வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸை மேற்கோள் காட்டி ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அது பற்றி

(19) ஆம் பக்கம் பார்க்க

## பல்கலை மாணவன் காயம்

யாழ்.பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட மாணவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவன் ஒருவர் செவிப்பறை பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருக்கின்றார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது, யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நண்பகல் சக மாணவிகளுடன் உரையாடிக் கொண்டு சென்றுகொண்டிருந்த கலைப் பீடத்தினைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவரை அழைத்த சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் அவரைக் கடுமையாகத் தாக்கியிருக்கின்றனர்.

சம்பவத்தில் குறித்த மாணவனின் செவிப்பறை கிழிந்திருக் கின்றது. இந் நிலையில் அவர் உடனடியாக யாழ். போதானா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். குறித்த மாணவன் மல்லாவியைச் சேர்ந்த தன்ராஜ் என்று சக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.


## சுவீகரித்த காணிகளுக்கு இழப்பீடு இல்லை

### குவியும் முறைப்பாடுகள்

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அதிகளவில் பொதுமக்கள் இழப்பீடு கோரி முறைப்பாடு செய்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். யாழ்ப்பாணத்தில் வீதி அகலிப்பு பணிகளின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தங்களது காணிகளைச்

(19) ஆம் பக்கம் பார்க்க

# உறங்கும் பேருந்துகள்



(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் திருத்தியமைக்கப்படாத நிலையில் சுமார் அறுபது பஸ் வண்டிகள் காத்துக்கிடப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கோண்டாவிலுள்ள யாழ்ப்பாண சாலையிலேயே கடந்த ஒரு வருடமாக இவை பாவனையின்றித் தரித்து நிற்பதாக பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். ரயர் மற்றும் ஏனைய வாகன உதிரிப்பாகங்கள் இல்லாமல் பாரிய வேலைகளுடனும் சிறிய வேலைகளுடனுமே இவை உள்ளதாக தெரியவருகின்றது.

குறிப்பாக, தேர்தல் காலங்களில் மட்டும் தென்பகுதியிலிருந்து வரும் அமைச்சர்கள் இவற்றை இயங்கச் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருவதாகக் கூறிச்செல்வதாகவும், பின்னர் அவர்கள் இதுதொடர்பில் அக்கறை கொள்வதில்லையென்றும் பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். தற்போது சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பெரும்பாலானவை மிகப் பழமையானவை என்றும் பயணிகள பிரயாணம் செய்ய முடியாத நிலையில் இவை உள்ளனவென்றும் இதனால் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியாதுள்ளதாகவும் இ.போ.சபையின் யாழ்ப்பாணத்துச் சாலை சுட்டிக் காட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் தற்போது சேவையில் ஈடுபடுத்த போதிய பேருந்துகள் இல்லாத நிலையில், இவற்றை இயங்கவைக்கப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கைகளை மேற கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்பகுதியிலுள்ள ஏனைய சாலைகளுக்கும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் அனைவருக்கும் விரைவில் விடுதலை

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகள் 384 பேர் நேற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். இதற்கான விசேட நிகழ்வு நேற்று வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. 2170 பெண்கள் உள்ளடங்களான 10490 முன்னாள புலி போராளிகள் ஒரு வருடகால புனர்வாழ்வுக்கு உட்படுத்தப் பட்டு சமூகத்துடன் இணைக்கப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தூள் கிளப்புகிறது தூள் வியாபாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் சோமசுந்தரம் அவனியூ பகுதியில், ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டிருந்த மூவரை யாழ். பொலிஸார் நேற்றுக், காலை கைதுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, குறித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் மூவரும் நடமாடியதையடுத்து, பிரதேச மக்களும் வர்த்தகர்களும் பொலிஸாருக்கு தகவல்

(19) ஆம் பக்கம் பார்க்க

# கோடிக்கணக்கில் ஊழல்

# ப.நோ.கூ.ச. மீது வழக்கு

## குற்றவாளிக் கூண்டில் முன்னாள் தலைவர்

யுத்தம் நடைபெற்ற காலத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கவென அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை தனியாரிற்கு விற்று, விற்ற பணத்தை கையாடிய மாபெரும் ஊழல் வழக்கு இன்று யாழ் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு வருகிறது. ஏ-9 நெடுஞ்சாலை போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் பொதுமக்களுக்கு விநியோகிக்கவென அரசினால் வழங்கப்பட்டிருந்த 27,500 கிலோ சீனியையும், 300 மூட்டை கோதுமை மாவையும் தனியாருக்கு கறுப்புச் சந்தையில் விற்று மோசடி செய்து பணத்தை கையாடியதாக யாழ். பொலிஸாரால் இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தமிழரசுக் கட்சியின் பொருளாளரும், கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டவரும், தற்போது நல்லூர் பிரதேச சபையில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக உள்ளவருமான பெ.கனகசபாபதி அவர்கள் ப.நோ.கூ. சங்க இயக்குனர் சபைத் தலைவராக இருந்த காலத்திலேயே இம் மோசடி நடைபெற்றதும், அவருடைய ஒத்துழைப்புடனேயே இம் மோசடி நடைபெற்றதாக ப.நோ.கூ.சங்க விசாரணைகளில் தெரியப்படுத்தப் பட்டிருப்பதும்

(19) ஆம் பக்கம் பார்க்க

தினமுரசு
இன்றுமுதல் இருபது பக்கங்களுடன் தினமுரசு
விலை 10/- மட்டுமே

# வாழ்வெழுச்சித் திட்டம் குறித்து ஆராய்வு



(கொழும்பு)

'திவிநெகும' எனப்படும் வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் அமைச்சர் தலைமையில் இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது அமைச்சின் கீழான நிறுவனங்களின் அனுசரணையுடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வாழ்வெழுச்சித் திட்டத்தை நாடளாவிய ரீதியில் மேலும் விரிவாக்கம் செய்வது தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகளிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் இத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய சாதக பாதக நிலைப்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இதில் அமைச்சின் செயலாளர் சிவ ஞானசோதி, தேசிய வடிவமைப்பு நிலையப் பணிப்பாளர் ஜனதா மார்சல், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## முன்னேற்ற மீளாய்வு தொடர்பான அதிபர்களுக்கான கூட்டம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்குரிய கடந்த காலச் செயற்பாட்டு முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதுடன், இக்கலந்துரையாடலில் சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவ் ஆண்டுக்கான முதலாம் தவணை மதிப்பீடுகள், 2014 க.பொ.த. உயர்தர மாணவர் அனுமதி, இவ் ஆண்டுக்கான இரண்டாம் தவணை வேலைத் திட்டம் மற்றும் தமிழ் மொழித் தினப் போட்டிகள், க.பொ.த. உயர்தர விஞ்ஞான பாட மறுசீரமைத்த பாடத்திட்டங்கள், வன்னி இடமாற்றத்தின் பின்னரான ஆசிரியர் பரம்பலின் சீராக்கம் முதலான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே, அதிபர்கள் கலந்துரையாடலுக்கு வரும்போது இதுவரை செலுத்தப்படாதுள்ள 2011 ஆம் ஆண்டு முதலாம் தவணைப் பரீட்சைக்கட்டணம் க.பொ.த. உயர்தர அரசியல் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கான துணை நூலொன்று, தர உள்ளீட்டுக் கணக்கறிக்கை, பாடசாலையின் சிறுதிருத்தம் தொடர்பான விபரங்களும், உத்தேச செலவு மதிப்பீடு என்பனவற்றைக் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

## வீட்டு மதிலுடன் மோதியது பாரவூர்தி

(காரணவாய்)

கரணவாய் இமையாணன் பகுதியில் நேற்று முன்தினம் காலை வாகன விபத்தொன்று இடம்பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து மண் ஏற்றிக்கொண்டு வலிகாமம் நோக்கிப் பயணித்த பாரவூர்தியும் நெல்லியடிப் பகுதியிலிருந்து உடுப்பிட்டி நோக்கிச் சென்ற திருமண வைபவ தனியார் பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் விபத்து இடம்பெற்றது.

இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்துள்ள நிலையில் மினிபஸ்சை மோதிய பாரவூர்தி கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த வீட்டு மதிலையும் மோதி இடித்துத் தள்ளியுள்ளது.

எனினும் எவருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை. சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## ஆலோசனைக் கூட்டம்

(வேலணை)

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் ஆலோசனைக் கூட்டம் இன்று பாதுகாப்புச் சபையின் தலைவர் அன்ரனிப்பிள்ளை பிறிட்டோ டக்கிளஸ் (வைத்தியர்) தலைமையில் யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (05)

## யோகசுவாமிகளின் 48ஆவது குருபூசை

(யாழ்ப்பாணம்)

நிகழும் கர வருடம் பங்குனி ஆயிலிய நாள் (02.04.2012) திங்கட்கிழமை எங்கள் குருநாதனது நாற்பத்தெட்டாவது குருபூசை நாள். அன்றைய தினம் முற்பகல் 10.00 மணி முதல் சிவதொண்டன் நிலையத்துப் புராண மண்டபத்தில் சுவாமிகளது திருமேனிக்கும் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் திருவடிக்கும் திவ்வியமான அபிஷேக ஆராதனை நிகழும். நண்பகல் மகேஷ்வர பூசையும் அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

சிவதொண்டன் நிலையத்தில் குருபூசைக்கு முந்திய மூன்று நாட்களும் (30.03.2012 - 01.04.2012) வழமை போன்று ஆச்சிரம வாழ்வு நாட்களாக அனுஷ்டிக்கப்படும். இந்நாட்களில் பூசை, நாள் வாய்ப்பாராயணம், நற்சிந்தனை, முற்றோதல், தியானம் என்பன நடைபெறவுள்ளது.

## நீதிமன்றச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

உரும்பிரர்ய் சிறுவர் பராமரிப்பு இல்லச் சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள கோட்டக் கல்விப்பணிப்பாளர் நாளைய தினம் வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ் வழக்கை விசாரித்த நீதிபதி மா.கணேசராசா வழக்கினை இன்று வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்துள்ளதோடு, சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (பா)

◈ ◈ ◈ ◈ ◈ ◈

புலிகள் இயக்கத்தின் கடற்புலிகளின் பிரிவில் கொமண்டோ பயிற்சி பெற்றார் என்று குற்றம் சாட்டப்பட்ட மாதகலைச் சேர்ந்த நபர் ஒருவரின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அவரது விருப்பிற்கு மாறாக பெற்றதாகக் கூறி யாழ். உயர் நீதிமன்றம் நிராகரித்து, அந்த வழக்கில் இருந்து அவரை நேற்று முன்தினம் விடுதலை செய்தது.

மாதகலைச் சேர்ந்த வில்லியம் மங்களதாஸ் என்பவரே யாழ். உயர் நீதிமன்றத்தால் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டார்

02.01.2009 அன்று கொழும்பில் வைத்து சி.ஐ.டி.யினரினால் கைது செய்யப்பட்ட இவர் மீது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் விசாரணைகளை மேற்கொண்டு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றினைப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். இந்தக் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் குறித்த நபரை அச்சுறுத்திப் பெறப்பட்டதாக தெரிவித்தே யாழ்.மேல்நீதிமன்றம் அதனை நிராகரித்து குறித்த நபரை விடுதலை செய்ததாகத் தெரியவருகின்றது.

◈ ◈ ◈ ◈ ◈ ◈

620 கிராம் போதைப்பொருள் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இளைஞருக்கு யாழ்.நீதிமன்றத்தால் 21 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (பா,எஸ்)

## நூலக அபிவிருத்திச் சபைக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தின் அபிவிருத்தி ஆலோசனைச் சபை மற்றும் வாசகர் வட்ட மாதாந்த நிர்வாக சபைக்கூட்டம் நாளை காலை 10.00 மணிக்கு நகராட்சி மன்றச் செயலாளரும், நூலக அபிவிருத்திச் சபைத் தலைவருமான இ.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

உலக புத்தக தினத்தைக் கொண்டாடும் முகமாக நூலக முப்பரிமாண சேவைகளைச் செயற்படுத்தல் போன்ற பல திட்டங்கள் ஆராயப்படவுள்ளதாகவும் உறுப்பினர்களைத் தவறாது, சமூகம் தரும்படி நூலகரும், அபிவிருத்திச் சபைச் செயலாளருமான சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (11)

## ஸ்ரீராமநவமி

(குருநகர்)

நாகேஸ்வரம் அளவெட்டி மேற்கு, ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை சனிக்கிழமை ஸ்ரீராமநவமி பூசை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு விசேட சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து ஸ்ரீராமசுவாமி சீதாப்பிராட்டி சகிதம் வீதியுலா எழுந்தருள்வார்.(68)


### மனமார்ந்த நன்றிகள்



நீதிமன்ற வீதி மல்லாகத்தில் உள்ள எனது வீட்டை 28.03.2012 ஆம் தினத்தன்று வரையும் நல்ல முறையில் பராமரித்து வந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கௌரவ மாண்புமிகு அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும்

யாழ். மாவட்ட அமைப்பாளர்

**கமல் தோழர்** அவர்களுக்கும்

வலி.வடக்கு அமைப்பாளர்

**அன்புத்தோழர்**

அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

வீட்டு உரிமையாளர்.

(R/127)

### சிறு விளம்பரங்கள்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1326)

**கணினி திருத்தம் (Computer Repair)**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1327)

உ
சிவமயம்
"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"
**புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை**

### கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவை முன்னிட்டு தண்டல் ஒழுங்குகள் பற்றிய அறிவித்தல்

நாகதம்பிரான் பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழன் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு இன்று (30.03. 2012) தொடக்கம் 03.04.2012 வரை வட்டக்கட்சி, இராமநாதபுரம், கல்மடு, விசுவமடு, திருவையாறு, பிரபந்தனாறு, மயில்வாகனபுரம், உடையார்கட்டு சுதந்திரபுரம், தேவிபுரம் போன்ற பகுதிகளுக்கு ஆலயத் தொண்டர்கள் ஆலய சின்னக் கொடிகளுடன் தண்டல் ஒழுங்குகளுக்காக வருகை தரவுள்ளனர்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலனசபை

(C/1345)

### பெயர் மாற்றம்

5ஆம் வட்டாரம் மண்கும்பான் வேலணையைச் சேர்ந்த சிறிமோகன் ராஜீவ் ஆகிய நான் எனது பெயரினை இன்றிலிருந்து சிறிமோகன் அப்துல் றகுமான் என மாற்றம் செய்துள்ளேன். எனது சகல ஆவணங்களிலும் சிறிமோகன் அப்துல் றகுமான் எனப் பயன்படுத்துவேன் எனச் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

சிறிமோகன் அப்துல் றகுமான்

(R/126)

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.

-காரல் மார்க்ஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மண் காத்திட வேண்டும்!

தொழிற்சாலைகளாலும் வாகனங்கள் மற்றும் இரசாயன உபகரணங்களாலும் நாம் காற்றை நஞ்சூட்டிக் கொண்டிருப்பதற்குச் சமமாக இரசாயன உரங்கள், கழிவுகள் மற்றும் கிருமி நாசினிகளால் நிலத்தையும் நஞ்சூட்டிக் கொண்டிருக்கிறோம். பெரும்பகுதியில் சிமெந்தும் தாரும் இட்டு மண் மூச்சுவிட முடியாமல் செய்து கொண்டிருக்கிறோம்.

இரசாயனங்களால் கெட்டழிந்து கொண்டிருக்கும் இந்த மண்ணைக் காக்கும் வழிமுறைகள் பற்றி அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் ஆராய்ந்துள்ளனர். மண்ணின் உயிர்ச்சத்தை அதிகரிப்பதற்கு மண்புழு உரம் மற்றும் தாவரக்கரி சேர்ப்பதால் நுண்ணுயிர்கள் பெருகி, மண்ணின் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஏற்படும் என்கிறார்கள்.

மண்ணில் வாழும் பெரும்பான்மையான பற்றீரியா, பூசணங்கள், பூச்சி வகைகளனைத்தும் தங்களது உயிர்வாழ் சக்திக்கு, மண்ணின் உயிர்ச் சத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. நல்ல வளமான பூமியில், ஒரு தேக்கரண்டி அளவுள்ள மண்ணில், சுமார் 6 கோடி நுண்ணுயிர்கள் இருக்கிறது.

ஜப்பானில் இந்த நுண்ணுயிர் அதிகரிப்புக்காக 'அக்ரிசார்' எனப்படும் ஒரு லட்சம் தொன் தாவரக்கரி மண்ணிலிடப்படுகிறது. பிரேசில் நாட்டின் பழங்குடியினர் பின்பற்றிய அந்த விவசாயத் தொழில் நுட்பத்தையே தற்போது உயிர்ப்பித்துள்ளனர்.

மண்புழு உரம் மற்றும் தாவரக்கரி இடுவதால் மண்ணின் ஈரம், கடும் கோடையிலும், இது இடாத மண்ணை விட 40 சதவிகிதம் அதிகமாக உள்ளதையும், அதிக விளைச்சல் கிடைத்துள்ளதையும் அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இலைகள் மற்றும் சாணத்தைப் பயன்படுத்தி, மண்புழு உரம் தயாரிக்கலாம்.

மிக வேகமாக வளரும் மலைவேம்பு மரத்தை, வரப்போரம் நட்டு, மிக அதிக விவசாயக் கரியாக உருமாற்றலாம். இதை கோமியம் மற்றும் நுண்ணுயிர் கலவைகளில் கலந்து அடியுரமாக மண்ணிலிடலாம். ஒருமுறை இட்டாலே, 50 முதல் 100 ஆண்டுகள் வரை தொடர்ந்து தாவரக்கரி பயன் அளித்துக் கொண்டே இருக்கும் என அவர்கள் கூறுகின்றனர். தரமிழந்த நிலங்களின் வளத்தையும் இதன்மூலம் மேம்படுத்தலாம் என்கின்றனர்.

மண்புழு உரமிடுவதால், 30 முதல் 50 சதவிகிதம் அதிக அளவு நைதரசன் சத்தையும், 100 சதவிகிதம் அதிக அளவு பொட்டாசியம் மற்றும் பொஸ்பரஸ் சத்தையும் உறிஞ்சி, செடிகளின் வளர்ச்சியும், விளைச்சலும் அதிகரிக்கும் எனவும் கண்டுள்ளனர். மண்புழு உரமிட்ட பூமிகளில் 100 மடங்கு அதிக அளவு நுண்ணுயிர்கள் உள்ளதும், தாவரங்களின் தரம் காக்கப்படுவதும் உறுதியாகியுள்ளது.

இரசாயன உரங்களுக்குப் பதிலாக இந்த இயற்கைத் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மண்ணைக் காக்கும் வழிமுறை பற்றி நாமும் தீவிரமாக யோசிக்க வேண்டும். உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் மண்ணைக் காக்காவிட்டால் நாம் காப்பாற்றப்பட மாட்டோம்.

மண்மாற்றத்தைச் செம்மைப்படுத்தி, வளத்தையும், நலத்தையும் ஒருங்கிணைக்கவல்ல, அறிவியலால் வாழ்வியலைச் செம்மைப்படுத்த வேண்டும். நீரின்றி அமையாது உலகு என்றால், மண் சீரின்றி அமையாது மன்னுயிர். மண்ணை, பொன்னைவிட இன்றியமையாத கண்ணைப்போல போற்றிக் காத்திட வேண்டும்.

- ஆசிரியர் -

# நல்லிணக்க ஆணைக்குழு வரையறையை மீறியுள்ளது

## — அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு —

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது. இந்தியாவோ ஏனைய மேற்குலக நாடுகளோ இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிடுவதை அனுமதிக்க முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கை ஒரு சுயாதீன நாடு. எனவே அந்நிய நாடுகளின் அழுத்தங்களுக்கோ வழிநடத்தல்களுக்கோ அடிபணிய வேண்டிய தேவை இலங்கைக்கு கிடையாது. உள்நாட்டு விடயங்கள் தொடர்பில் தேசிய பொறிமுறைகள் பொறுப்புடன் செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில்,

2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் நடைபெற்ற உள்நாட்டு போருடன் தொடர்புடைய சம்பவங்களை ஆராய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய ஆணைக்குழு தனது வரையறையை மீறிச் செயற்பட்டுள்ளது. எனவே அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை எந்தளவிற்கு ஏற்றுக் கொள்ள முடியும் என்பதும் கேள்விக்குறியான விடயமாகும்.

எவ்வாறாயினும் ஜெனிவாத் தீர்மானத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முக்கிய இடம்பிடித்துள்ளது. இப் பரிந்துரைகளை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மேற்குலக நாடுகள் வலியுறுத்துகின்றன. இதற்கு ஆதரவு வழங்கும் வகையில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து கொண்டு செயற்படுகின்றன.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு உள்ளூர் பொறிமுறையே தேவைப்படுகின்றது. அது மட்டுமின்றி இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் அந்நிய நாடுகளின் ஆதிக்கத்தை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. அதேபோன்று பரிந்துரைகளை முழு அளவில் நடைமுறைப்படுத்தவும் முடியாது என்றார்.

## தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த தவறியதால் அந்நியத்தலையீடு

### கூறுகின்றது ஜே.வி.பி.

(கொழும்பு)

யுத்தத்தின் முடிவில், தேசிய நல்லிணக்கத்தையும், ஜனநாயகத்தையும் பொறுப்புக் கூறும் செயற்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்பதால், வெளிநாடுகளும், அமைப்புகளும் இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ள அரசாங்கம் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜெனிவா யோசனையில் இலங்கை வெற்றி பெற்றிருந்தாலும், நாட்டின் இறையாண்மை ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அமெரிக்கா உலகில் உள்ள ஏனைய நாடுகளில் புகுந்து, கொடூரமான முறையில் மனித உரிமைகளை மீறி வருகிறது. இந்தக் குற்றச் செயல்களை மூடிமறைப்பதற்காகவே, அமெரிக்கா, இலங்கைப் பிரச்சினையை பயன்படுத்தி வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## காலநீடிப்பு இல்லை

(கொழும்பு)

க. பொ. த.சாதாரண தர பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் புஷ்பகுமார தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை முதல் வெளியாகியுள்ள விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## நாற்பதினாயிரம் போலி வைத்தியர்கள்

(கொழும்பு)

இலங்கை முழுவதும் சுமார் 40,000 போலி வைத்தியர்கள் செயற்பட்டு வருவதாகவும் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் போலி வைத்தியர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அமைச்சு குறிப் பிட்டுள்ளது.

இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்யப்படாமல் சிகிச்சை அளிப்பதோ, மருந்து வழங்குவதோ தண்டனைக்குறிய குற்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒருங்கிணைந்த ஆசிரிய இடமாற்றம்; செயற்படுத்த அரசாங்கம் முடிவு

(கொழும்பு)

தேசியப் பாடசாலைகள் மற்றும் 1000 இடை நிலைப் பாடசாலைகளில் ஒருங்கிணைந்த ஆசிரிய இடமாற்றத் திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கல்வி அமைச்சர் இதுகுறித்து முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது.

தற்போதைய கொள்கைப்படி 8 வருடங்கள் நீண்ட சேவையில் இருக்கும் மாகாண பாடசாலை ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுகிறது.

எனினும் நாடு முழுவதும் உள்ள 342 தேசிய பாடசாலைகளில் 10 வருடங்களுக்கு ஒரு முறையே ஆசிரியர் இடமாற்றம் வழங்கப்படுவதால் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனால் கல்வி அமைச்சின் கீழ் உள்ள 342 தேசிய பாடசாலைகள் மற்றும் 1000 இடைநிலை பாடசாலைகள் என்பவற்றை ஒன்றிணைத்து ஆசிரியர் இடமாற்றத் திட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது.

## ரஷ்ய ஏவுகணைகள் மூலமாகவே விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன

(கொழும்பு)

ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்டே விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மற்றும் விமானம் ஒன்றின் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்பது பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதி விடுதலைப் புலகளினால் நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாகவே 'லயன் எயர்' பயணிகள் விமானம் தாக்குதலுக்கு இலக்கானது. இந்தத் தாக்குதலுக்கு ரஷ்ய ஏவுகணையே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த விமானம் மீது தாக்குதல் நடத்தியவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி சுட்டு வீழத்தப்பட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான 'அன்டனோ' விமானத் தாக்குதலுக்கும் ரஷ்ய ஏவுகணைகளே பாவிக்கப்பட்டன. இந்த விமானத்தின்மீது தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வேறு சில விமானங்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தமையும் விசாரணைகளிலிருந்து தெரிய வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் இருவரும் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டதுடன் விமானம் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பயன்படுதத்திய ஏவுகணையின் சிதைந்த பாகங்களும் நீதிமன்றத்தில் காண்பிக்கப்பட்டன என்றும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை

# காரைநகர் பிரதேச சபை மீது எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச சபை தெரிவு செய்யப்பட்ட பின்னர் இதுவரை எட்டுக் கூட்டங்கள் நடைபெற்ற நிலையில் சபையினால் முன்வைக்கப்பட்ட ஒரு வேலைத திட்டமும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என ஈ.பி.டி.பி.யின் காரைநகர் அமைப்பாளரும் காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் (ரஜினி) குற்றஞ் சாட்டியுள்ளார்.

காரைநகர் பிரதேச சபையின் 8 ஆவது மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 10 மணியளவில் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரதேச சபையில் மூன்று கூட்டங்களுக்கு மேலாக எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானமானது கசூரினா கடற்கரையில் மதுப் பிரியர்களின் அட்டகாசத்தை இல்லாதொழிக்க மதுபானங்கள் தடைசெய்யப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் இன்னமும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. கசூரினா கடற்கரை எல்லைக்குள் இனி மதுபானங்களை எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட வேண்டும் என்றும் இல்லாத பட்சத்தில் தவிசாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, நாம் செய்கின்ற வேலைகள் சிலவற்றை எதிர்க கட்சி உறுப்பினர்கள் சிலர் தாம் செய்து வருவதாக பொய்ப் பிரசாரங்கள், விளம்பரங்கள், இணையத் தளங்கள் மூலம் அறிவித்து வருகின்றனர். இதனை இச்சபை மூலமாக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மேலும் தவிசாளர் தனக்கு வாகனம் இல்லை என்ற காரணத்தைக் காட்டி சில வேலைத் திட்டங்களை முடக்கியே வைத்துளளார். மக்களுக்கு சேவையாற்ற மக்களால் தெரிவு செய்யப்பட்ட நீங்கள் நடந்தும், மாட்டு வண்டிகளிலும் சென்றும் சேவையாற்றலாம். தேர்தல் காலங்களில் எவ்வாறான வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்துள்ளீர்கள். நாம் 22 வருடங்களாக இடம் பெயர்ந்து இருந்த மக்களுக்கு தோள்களில் உணவினையும், தண்ணீரையும் சுமந்து சென்று அவர்களைப் பாதுகாத்தோம்.

தற்போது யுத்தம் முடிவடைந்த காலப்பகுதியில் சில அரசியல் கட்சிகள் வீரம் பேசி மக்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கின்றனர். மக்களுக்கு இது நன்றாகவே தெரியும். ஈழ மக்கள ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா எவ்வாறான தியாகங்களைச் செய்துள்ளார் என்று அறிவார்கள். இவை அனைத்தும் தங்களுக்கும் தெரியும். எம்மைப் பொறுத்தவரை கட்சிப் பேதமின்றி அனைவருமே எமது மக்கள், எமது இனம் என்று பார்ப்பவர்கள் அவ்வாறு தான் எம்மை எமது தலைமை வழி நடத்துகின்றது. அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற அனைத்து உதவிகளையும் கட்சிப் பேதமின்றி அனைவருக்குமே பகிர்ந்தளித்து வருகின்றோம். அது மனச்சாட்சியுள்ள மக்களுக்கும் மனச்சாட்சியுள்ள உங்களுக்கும் நன்றாகவே தெரியும் எனத் தெரிவித்த அவர் காரசாரமான விவாதத்தின் பின் பிரதேச சபையின் தவிசாளரால முன்வைக்கப்பட்ட பல வேறுபட்ட வேலைத்திட்டங்களை கூடிய விரைவில் செய்து முடிப்பதாக அவர் உறுதியளித்தார்.



வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அண்மையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்ட நிலாக்கால கலைக்கதம்பம் நிகழ்வில் தொல்புரம் கலாலயக் குழுவினரின் ஜமதர்மத் தீர்ப்பு நாடகத்தின் ஒரு பகுதியைக் காணலாம். (50)

# ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் 2ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் சி.யோகேந்திரன், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியச் செயலாளர் பொ.கமலநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பதில் செயலாளர் சு.ஸ்ரீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

இதுவரை அங்கத்தவர் அட்டையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் அன்றைய தினம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

# அனலைதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமனம்

(வேலணை)

அனலைதீவுப் பகுதியில் இயங்கி வரும் ஆயுர்வேத வைததியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் நேற்று முன்தினம் முதல் நியமிக்கப் பட்டுள்ளார்.

இவ்வைத்தியசாலைக்கு கடந்த சில மாதங்களாக நிரந்தர வைத்தியர் இன்றி பொது மக்கள் சிகிச்சையைப் பெறுவதற்குப் பலவேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் அனலைதீவுக்கு விஜயம் மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பிரதேச தவிசாளர் ம.ஜெயகாந்திடம் இம்மக்கள் இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த வேண்டுகோளின் பிரகாரம் தவிசாளர் உரிய அதிகாரிகளிடம் கலந்துரையாடியதன் பின்னர் தற்போது இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனால் தற்போது அவசர நோய் என்றால் உடனே சிகிச்சையைப் பெற்று மருந்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதாக அனலைதீவுப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (85, 05)

# விவசாய உபகரணங்கள் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம் கிராம மக்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு தொகை விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

திருக்கேதீஸ்வர சிவனருள் இல்லத்தினால் சி.எவ்.சி.டி. நிறுவனத்தின் அனுசரணையுடன் இக்கிராமத்திலுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 100 குடும்பங்களுக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு இராமேஸ்வரி முன்பள்ளியில் இடம்பெற்ற இவ் வைபவத்தில் மேற்படி குடும்பங்களுக்கு விவசாய உள்ளீட்டுப் பொருட்களான மண்வெட்டி, கோடாரி உள்ளிட்டவை வ்ழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சி.எவ்.சி.டி. நிறுவன இணைப்பாளர் என். சேந்தினி, கே.தயாளினி ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர். (04)


# மாகாண மட்ட புதிர்ப்போட்டி

(வலிகாமம்)

வடமாகாணத்தின் பன்னிரண்டு கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இடையே வடமாகாண மட்ட விசேட புதிர் தொவுப் போட்டி நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதுடன், தெரிவுப் போடடிக்கு ஒவ்வொரு கல்வி வலயங்களிலிருந்தும் மொத்தம் 24 அணிகள் இதில் பங்குபற்றவுள்ளன. தரம் 11 மாணவர்கள் ஒரு அணியினராகவும், க.பொ.த. உயாதரப் பிரிவினர் ஒரு அணியாகவும் போட்டி இடம்பெறவுள்ளது.

அந்தந்த அணிகள், அந்தந்த வகுப்பு ரீதியான அணிகளுடனேயே போட்டியில் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (06)



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட "ஞானச்சுடர்" சஞ்சிகையின் வாசகர் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் விழாவில் இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் வெற்றியீட்டிய ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைக் காணலாம். (11)

# பேருந்துகள் நிறுத்துமிடத்தை தெரியப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் 581ஆம் இலக்க வழித்தடப் பேருந்துகள் நிறுத்தும் இடம் தெரியாது பயணிகள் அலைந்து திரிவதுடன் பேருந்தைத் தவறவிடும் சந்தர்ப்பங்களும் ஏற்படுவ தாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இங்கு மேற்படி பேருந்துகள் எங்கு நிறுத்தப்படுகிறது என்ற அறிவித்தல் அல்லது அதன் இலக்கம் இதுவரை குறித்து ஒதுக்கப்படவில்லை என்று அந்தப் பாதைப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

மண்டைதீவு பகுதிக்குச் செல்லும் இந்த இலக்கப் பேருந்துகள் எங்கு நிறுத்தப்படுகிறது என்பதைக் கண்டறிவதற்கு பாடசாலை சிறார்களும், பெரியவர்களும் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையைக் கருத்திற்கொண்டு தீவகப் பகுதிப் பேருந்துகள் நிறுத்தப்படும் பகுதியில் 581 ஆம் இலக்கத்தையும் மண்டைதீவு என்ற ஊர்ப் பெயரையும் குறிப்பிடுவது அவசியமானது. இது குறித்து சாலைப் பகுதியினர் ஆவன செய்யுமாறு பயணிகள் கேட்டுக் கொள்கின்றனர். (23)

## விளக்கமளிக்கும் நிகழ்வு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான விளக்கமளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் மேற்படி விடயம் தொடர்பாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் விளக்கமளிககவுள்ளதால் பொது அமைப்புகளைக் கலந்துகொள்ளுமாறு வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (18)

## நிர்வாகத் தெரிவு

(வேலணை)

யாழ்கொட்டடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப.3 மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் தெ.நிஷாகரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்தக் கூட்டத்தில் கொட்டடி ஜே/83 கிராம சேவை அலுவலர் எச்.சேந்தன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி பொதுக்கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது. (05)

# அடிப்படை வசதிகளைப் பெற்றுத்தருமாறு வள்ளிபுனம் கிராம மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் புதுக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வள்ளிபுனம் கிராம மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு கஷ்டங்களை அனுபவிப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.


இக்கிராம மக்கள் மீள் குடியேறி 9 மாதங்கள் கழிந்துள்ள நிலையில் வீட்டுத்திட்டம், மின்சாரம், கடன்உதவிகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள வில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

கடந்த யுத்த அனர்த்தங்களினால் இங்குள்ள வீடுகள் முழுமையாகச் சேதமடைந் துள்ள நிலையில், 40 வீடுகள் மட்டுமே யு.என்.ஏச்.சி.ஆர். நிறுவனத்தால் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் திருத்தியமைக்கப் பட்டுள்ளதாகவும், ஏனைய வீடுகள் புனரமைக்கப்படாத நிலையில் முழுமையாக சேதமடைந்த வீடுகளும் திருத்தியமைக்கப் பட்டுள்ளதாகவும் வீட்டுத்திட்ட வசதிகளும் தமக்கு வழங்க வில்லை என இக் கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதைவிட 225 குடும்பங்களுக்கு மேற்படி நிறுவனம் தற்காலிகமாக வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளதாகவும் நிரந்தர வீடுகள் எதுவும் தமக்கு வழங்கப் படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.


மின்சார விநியோகத்திற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக் கப்பட்டும் மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை. அத்துடன் மீள்குடியமர்ந்த மக்களுக்காக வழங்கப்படும் 20 ஆயிரம் ரூபா பணமும் தமக்கு கிடைக்கவில்லை என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் குறித்து அரசசார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து உதவிகளைப் பெறறுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)



காகில்ஸ் நிறுவனத்தினால் நெல்லியடியில் அதன் கிளை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.எரிக்.எல்.பெரேரா பூட்சிற்றியின் நாடாவை வெட்டித்திறந்து வைப்பதனையும், 52ஆவது படையணியின் இராணுவக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் டபிள்யூ.ஏ. வீ.ஏ.சுதசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஸ்ரீ. குகநேசன் ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.

# நீலிப்பந்தன் அம்மனின் உடைமைகள் திருட்டு



(காரைநகர்)

காரைநகர் - நீலிப்பந்தனை அம்மன் ஆலயத்தில் கடந்த வாரம் வாகன சாலையில் வைக்கப்பட்டிருந்த குதிரை, காராம்பசு ஆகிய வாகனங்களின் தலைப்பகுதியை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

அத்துடன் கோவில் வாசலில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு பணமும் அன்றைய தினம் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நடைபெற்று ஒரு மாதத்திற்கு முன்பாக ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்திலிருந்த ஐம்பொன் சிலையும் களவாடப்பட்ட நிலையில் மக்கள் பெரிதும் அச்சமடைந்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (50)

# மீள் குடியேறிய குடும்பங்களுக்கு மானிய அடிப்படையில் கடனுதவி

(கிளிநொச்சி)

அக்கராயன்குளம் கிழக்குக் கிராமத்தில் மீள் குடியேறிய 75 குடும்பங்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் மானிய அடிப் படையில் கடனுதவி வழங்க முன்வந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் சிறுவர் பாதுகாப்பு நிறுவன அதிகாரி மற்றும் கிராம சேவையாளர் ஆகியோரினால் இதற்குரிய பயனாளிகள் தெரிவு கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

இத்திட்டத்தில் தலா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 25 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையிலான பணம் (மீளளிக்கத் தேவையில்லை) மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே இடம்பெற்ற பயனாளிகள் தெரிவில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்ததன் காரணத்தால் அதிகாரிகள் முன்னிலையில் பயனாளிகள் தெரிவு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் படுகின்றது. (144)

# கலந்துரையாடல்

(வலிகாமம்)

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களினதும் ஆரம்பக்கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளரால் வலயக்கல்விப்பணிப் பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாணத்தில் உள்ள 12 வலயக்கல்விப் பணிமனைகளிலும் ஆரம்பக்கல்விக்குப் பொறுப்பாகவுள்ள உதவிக்கல்விப் பணிப்பாளர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# மனவளக் கலைப் பயிற்சி இலவச அறிமுகவுரை

(யாழ்ப்பாணம்)

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியால் வடிவமைக்கப்பட்ட யோகா பயிற்சிகள் தொடர்பான இலவச அறிமுக உரை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மனவளக்கலைப் பேராசிரியர் ஜி.கலாவதியால் இந்த அறிமுகவுரையும் தொடர்ந்து பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை காயகல்ப பயிற்சிகள், எளிய முறை தியானப் பயிற்சிகள், அகத்தாய்வு என்னும் தற்சோதனைப் பயிற்சி என்பன பயிற்சியில் உள்ளடக்கப்பட்டிருப பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பயிற்சிகள் அன்றைய தினம் தொடக்கம் 06 ஆம் திக்தி வரை மாலை 5 மணி முதல் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்திலும் 07 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரைபிற்பகல் 4.30 மணி முதல் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல மண்டபத்திலும் இடம் பெறவுள்ளன. (10)

# அவசரகூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலை அதிபர்களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர் வரும் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் 4 மணிவரை புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சகல அதிபர்களையும், கோட்டக்கல்வி அதிகாரிகள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக் கப்பட்டுள்ளது. (109)

# குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் 31 ஆவது குருபூசை தினம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் ஆதீனத்தில அமைந்துள்ள குருமூர்த்த ஆலயத்தில் காலை 8 மணி முதல் விசேட அபிஷேக ஆராதனைகள், பூசை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன. அடியார்கள் இப் பூசை வழிபாட்டில் கலந்து வழிபாடு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# முரசின் இன்றைய பலன்

(30.03.2012 –வெள்ளிக்கிழமை)

கர வருஷம் பங்குனி 17 ஆம் திகதி. ஸப்தமி முற்பகல் 8.52 வரை. நட்சத்திரம் திருவாதிரை பின்னிரவு 4.12 வரை. சித்தயோகம். மஹாஷ்டமி. அட்டமி முற்பகல் 8.52இன் மேல். இராகுகாலம் 10.42- 12.12 வரை. சுபநேரம் 6.12 - 7.42 வரை. எமகண்டம் 3.12 - 4.42 வரை. குளிகைகாலம் 7.42 - 9.12 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | அனாவசிய செலவு, சகோதரர் உதவி, பந்தயங்களில் வெற்றி. இடைஞ்சல்கள் தீரும். |
| ரிஷபம் | மன அமைதி, விருப்பமற்ற இடமாற்றம், கூட்டு வியாபாரம் பலிக்கும், மேலதிகாரிகள் மடக்கம். |
| மிதுனம் | ஆதாயம், குடும்ப உறவில் திருப்தி, பொன் பொருள் சேரும், அதிகாரிகள் நட்பு. |
| கடகம் | சந்தேகம், முன்னெச்சரிக்கை, சீரான கணவன் மனைவி உறவு, மௌனம் உத்தமம். |
| சிம்மம் | புகழ் வந்து சேரும், நண்பர்களால் உதவி, குடும்பத்தில் இனிமை, தொழிலில் முன்னேற்றம். |
| கன்னி | அலைச்சல் மிகுதி, பழைய நண்பர் கூடுவார், புது முயற்சி வேண்டாம், குழந்தைகளால் செலவு. |
| துலாம் | நல்ல தகவல், கூட்டு முயற்சி வேண்டாம, பணம் பொருள் நஷ்டம், அரச உதவி கிட்டும். |
| விருச்சிகம் | வாழ்கையில் உயர்வு, பெற்றோரால் உதவி, சகோதரரால் இடைஞ்சல், புத்திரரால் செலவு. |
| தனுசு | பாராட்டுக்கள், பெண்களால் இலாபம், குறைவற்ற வருவாய், குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| மகரம் | உடல் உள நலம், வியாபாரத்தில் விருத்தி, சலுகைகள் கிடைக்கும், சகோதரரால் உதவி. |
| கும்பம் | மனநிறைவு, கணவன் மனைவியிடையே ஒற்றுமை, அனுசரித்துப் போகவும், விழிப்புணர்வு அவசியம். |
| மீனம் | நட்பு நாடிவரும், உடல் நலத்தில் திருப்தி, எதிலும் நிதானம் நன்று, உல்லாசப்பயணம். |

# கோட்டமட்ட ரீதியிலான தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

கரவெட்டிக் கோட்டம்:

வட மராட்சி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப் பட்ட கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற மாணவர் களின் விபரம் வருமாறு:

நடனம் குழு பிரிவு - I

யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

இசை குழு பிரிவு - I

யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.

இசை குழு - II

யா/ஞானாசாரியர் கல்லூரி, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

தனி நடனம் பிரிவு - V

ப.பகீரதி- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தி.நிவேதினி- யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

தனி இசை பிரிவு - V

சி.ஜீவந்திகா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ந.சுனித்தா யா/விக்னேஸ்வராக் கல்லூரி.

நாட்டார் பாடல் (திறந்த போட்டி)

யா/விக்னேஸ்வராக் கல்லூரி, யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.

வாசிப்பு பிரிவு - I

அ.தனுசீலன்- யா/கட்டைவேலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, ம.அபிநயா- யா/நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, இபானுஜன் - கரணவாய் வேதாரணியேஸ்வராக் கல்லூரி.

வாசிப்பு பிரிவு - II

கா.கார்த்தீபன்- யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, ஜெ.சாம்பவி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

ஆக்கத்திறன் கதை கூறல் பிரிவு - I

சு.அபினயா யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், சி.லதுர்சன் யா/ஞானசாரியார் கல்லூரி. (தொடரும்)

(116)

# இலங்கைக்கெதிரான பிரேரணை இனவிரிசலை அதிகரித்துள்ளது

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணை எமது நாட்டில் இனங்களுக்கிடையிலான விரிசலை மேலும் படுமோசமாக அதிகரித்துள்ளதாக நீதியமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தமிழர் தரப்பிலும் சிங்களவர் தரப்பிலும் சிலர் வீராப்புப் பேசிக் கொண்டிருப்பது இந்நாடு சகஜ நிலைக்குத் திரும்புவதை மேலும் காலதாமதப் படுத்துகிறது. இதற்கு இந்த தீவிரவாத சக்திகள் துணை போகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர்கள் ஜெனிவா தீர்மானத்துக்குப் பின்னரான கள நிலைவரத்தைக் கவனமாக கையாள வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும். தமிழகத்திலிருந்து சுமந்திரன் எம்.பி.விடுத்துள்ள அறிக்கையின் சில அம்சங்கள் வரவேற்கத்தக்கன.

வடக்கு, கிழக்கில் இராணுவ மயப்படுத்தலைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கை வரவேற்கத் தககது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்த வரையில் இதற்கு உடன்படுகிறது.

இதேவேளை, ஜெனிவாவில் பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்பு ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் புலம்பெயர் தமிழ் சமூகம் மீண்டும் புலிகளுக்கு உயிர் கொடுத்து களம் அமைத்துக் கொடுக்க முயற்சிக்கின்றன என்ற பீதியைக் கிளப்பி விட்டுள்ளன. இதன் மூலம் இராணுவத்தை வடக்கு, கிழக்கிலிருந்து அப்புறப் படுத்தக்கூடாது என்று அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறது. இது ஜெனிவா பிரேரணையின் பக்க விளைவாகும்.

ஏற்கனவே இருக்கின்ற உள்ளூர் கள நிலைவரங்களை மேலும் குழப்பிவிட்டு தீர்வுகளை நோக்கிய நகர்வுகளை சிக்கலாக்குவதற்கு இக்கட்சிகளின் செயற்பாடுகள் காரணமாய் அமைந்துள்ளன.

மேர்வின் சில்வா போன்றவர்கள் வழமைபோல் காட்டுத் தர்பார் வசனங்களைப் பேசத் தொடங்கியுள்ளார்கள். இது ஆரோக்கியமானதல்ல. இதே போன்று அமைச்சர் விமல் வீரவன்ச அமெரிக்கப் பண்டங்களைப் பகிஷ்கரிக்கும் படி கட்டுப்பாடு போடுவது அப்பட்டமான கேலிக்கூத்தாகும்.

தேசத்துரோகிகளின் கால்களை உடைப்போம், நொருக்குவோம் என்பது ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் கஷ்டத்துக்குள் தள்ளி விடும் செயலாகும்.

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதுதான் ஜெனிவா பிரேரணையின் நோக்கமாக இருந்தால் அவசரமான இப்படியான நடவடிக்கைகள் அந்தத் தேவையின் இலக்கை அடைவதை இன்னும் சிக்கலடையச் செயயும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற ரீதியிலும், நீதியமைச்சர் என்ற அடிப் படையிலும் நான் ஜெனிவா செல்ல நேர்ந்தது. உள்நாட்டு கள நிலைவரங்களின் யதார்த்த நிலையை விளக்குவதே எனது நோக்கமாக இருந்ததேயொழிய வெற்று வாக்குறுதிகளை வழங்கிவிட்டு வருவது எங்கள் நோக்கமாக இருக்கவில்லை.

அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும் அவர்களின் முழு இராஜதந்திர பலத்தையும் பிரயோகித்து இந்தியாவை அவர்களுக்கு சார்பாக வாக்களிக்க வைத்ததைத் தவிர வேறு எதனையும் பெரிதாக சாதித்துவிட்டதாகக் கூறடியாது எனவும் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடம் பிடித்த கொழும்பு விசாகா கல்லூரி மாணவி உதேஷிகா ஹெட்டியாராட்சி பாடசாலை ஆசிரியர்களுடன் நிற்பதனைக் காணலாம்.

# விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் இராணுவத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சனல் -4 ஊடகத்தின் ஆவணப் படம் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து நீதவான்கள் அடங்கிய இராணுவ நீதிமன்றினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையில் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இராணுவத்தினரின் விசாரணை அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளதாகக் குறிப பிட்டுள்ளார்.

# மாணவர்குழு மோதல்; 25 பேர் கைதாகினர்

(கொழும்பு)

கண்டி உயர்தொழிநுட்ப நிறுவனத்தின் இரண்டு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக 25 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொழிநுட்ப நிறுவனத்தின் முதலாம் வருட மாணவர் குழுவினருக்கும் இரண்டாம் வருட மாணவர் குழுவினருக்கும் இடையிலேயே மோதல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த இரண்டு மாணவர்கள் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மாணவர்கள் குறித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரம்



## அமெரிக்க யோசனையில் உள்ளதென்கிறார் விமல்

(கொழும்பு)

கோதுமை மாவின் விலையை அதிகரிக்கும் ஒப்பந்தத்தை அரசசார்பற்ற நிறுவனங்கள் ஏற்றுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். ஒரு கிலோ நெல்லுக்கு 40 ரூபாவை வழங்க வேண்டும் என்ற போராட்டத்தை இந்த நிறுவனங்களே மக்கள் மத்திக்கு கொண்டு சென்றுள்ளன எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

குருணாகல் இப்பாகம்முவ பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு முக்கியமான விடயங்களை உள்ளடக்கியே, இந்தியா மனித உரிமைப் பேரவையில், சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு ஆதரவு வழங்கியதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்தியா கூறுவது போல், இரண்டு சமாதான விடயங்களை உள்ளடக்கியே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வார்த்தைகளில் அமெரிக்காவுக்கு எந்தத் தேவையுமில்லை. அவர்களுக்கு தேவையானவற்றை அவர்கள் செய்கின்றனர். குறைந்தது, இணக்கப்பாடு என்ற வார்த்தையை யோசனையில் சேர்ந்திருந்தால் மிகவும் நல்லது.

மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என அமெரிக்காவின் யோசனையில் தெரிவிக் கப்பட்டுள்ளதால், சர்வதேச நாடுகளில் உள்ள புலிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் எனவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

## யாப்பில் திருத்தம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் ஏனைய உயர் பதவிகளுக்கான தேர்தலை வருடா வருடம் நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தா தாக்கப்பட்டமை தொடர்பில், ஸ்ரீநாத் பெரேரா குழு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, கட்சியின் தலைமைத்துவம் உள்ளிட்ட பதவிகளுக்கான தேர்தல்களை வருடாவருடம் நடத்துவதற்கான யாப்பில் சீர்திருத்தம் மேற்கொள்ளவிருப்பதாக கூறப்படுகிறது.

# சமுர்த்தி வங்கியில் நிதி மோசடி; 18 அதிகாரிகள் பதவி நீக்கம்

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் சமுர்த்தி வங்கிகளில் நிதி மோசடி செய்த 18 சமுர்த்தி உத்தியோகத்தர்களை பதவி நீக்கம் செய்துள்ளதாக சமுர்த்தி திணைக்களம் கூறியது. 40 இலட்சம் ரூபா நிதி மோசடி செய்தது தொடர்பில் இவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதோடு மற்றொரு சமுர்த்தி உத்தியோகத்தர் குறித்து விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக சமுர்த்தி ஆணையாளர் பந்துல திலகசிறி தெரிவித்தார்.

2005 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்ட சமுர்த்தி வங்கிகளினூடாகவே இவ்வாறு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது நிதிமோசடி குறித்து தகவல் கிடைத்துள்ளது. இது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையின் போது சமுர்த்தி பெறுவோர் என போலியான பெயர்களை சமர்ப்பித்து சமுர்ததி வங்கிகளில் பணம் மோசடி செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டது.

19 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இவ்வாறு இணைந்து நிதி மோசடி செய்துள்ளது தெரிய வந்ததையடுத்து அவர்களுக்கு எதிரான விசாரணை முன்னெடுக் கப்பட்டது. இவர்கள் நிதி மோசடி செய்துள்ளது நிரூபணமானதையடுத்து 18 சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக சமுர்த்தி ஆணையாளர் கூறினார்.

## பிரச்சினைகளுக்குத் தீர்வு

(கொழும்பு)

சுகாதார ஊழியர்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளதாக பிரதிச் சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்க தெரிவிக்கின்றார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இந்தக் கருத்தினைக் கூறினார்.

சுகாதார ஊழியர்கள் 5000 பேருக்கு நிரந்தர நியமனம், 60 மணித்தியால மேலதிக நேரக் கொடுப்பனவை 100 மணித்தியாலமாக அதிகரித்தல் ஆகிய கோரிக் கைகளும் அடங்குகினறன.

# அமைச்சர் மேர்வினின் கருணை கை, கால்களை உடைப்பது குறைந்தளவு தண்டனையாம்

(கொழும்பு)

என்னைப் பற்றிய வதந்திகளைப் பரப்புவதன் மூலம் விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காக எனது பெயரை ஊடகங்கள் பயன்படுத்த விரும்பினால் அப்படி செய்து கொள்ளட்டும் என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பண்டைய மன்னர்கள் காலத்தில் வழங்கப்பட்ட தண்டனைகளுடன் ஒப்பிடும்போது கை, கால்களை உடைப்பது குறைந்த தண்டனையாகும் என்பதை நான கூற வேண்டுமெனவும் அவர தெரிவித்துள்ளார்.

சமய வழிபாடுகளில் கலந்து கொள்வதற்காக களனி விகாரைக்குச் சென்றிருந்த அமைச்சர் மேர்வின் சில்வா அங்கு செய்தியாளர்களை சந்தித்தபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியுள்ளதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு எனக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக கேள்விப்பட்டேன். ஆனால் அது தொடர்பாக எனக்கு முறைப்படி அறிவிக்கப்படவில்லை. ஊடகங்கள் தமது விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காக பொய்களை பிரசாரப்படுத்துகின்றன. அவர்கள் மேர்வின் சில்வாவை விற்க முடிந்தால் விற்கட்டும்.

தெற்கை சேர்ந்தவன் என்ற வகையில், நான் இந்த நாட்டிற்குத் துரோகம் செய்ய மாட்டேன். கை, கால்களை உடைப்பேன், பண்டைய மன்னர்கள் காலத்தில் வழங்கப்பட்ட தண்டனைகளுடன் ஒப்பிடும்போது கை, கால்களை உடைப்பது குறைந்த தண்டனையாகும். நாட்டை காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கு பண்டைய மன்னரகள் கருணை காட்டவில்லை.

வெளிநாட்டவர்களின் டொலர்களில் தங்கியுள்ள எந்த நபரும் சிங்கள சமூகத்தை நாசமாக்குவதற்கான ஊத்தை வேலைகளை செய்வதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லை என்றார்.

# ரணிலின் கவனம் அரசியற் தீர்விலல்ல ஆட்சியைக் கைப்பற்றுவதிலேயே!

கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

**எதிர்க்கட்சித்** தலைவர் ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய குழுவினருடன் கடந்த வாரம் வடக்கே, யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ரணில், அங்கே சில பிரதேசங்களுக்குச் சென்று மக்களுடன் சந்திப்புகளை நடத்தினார். அங்குள்ள சில முக்கியஸ்தர்களையும் சந்தித்தார்.

ரணிலின் விஜயம், அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிவதும் ஐ.தே.கவின் நிலைப்பாட்டைப் புரியவைப்பதுமாகும். மேலும் யாழ்ப்பாண மக்களின்உணர்வுகளை அறிந்து கொள்வதுமாகும் என ரணிலின் பயணத்தில் கலந்து கொண்டிருந்த ஐ.தே.க வின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ரணிலின் வருகையும் யாழ்ப்பாணத்தில் அவர் பேசியவையும் தலைப்புச் செய்திகளாகின ஊடகங்களில். அவர் அங்கே பேசத் தயங்கிய விசயங்களும் விதி விலக்காகத் தலைப்புச் செய்திகளாகின ஒரு சில ஊடகங்களில்.

இவையெல்லாம் புதினமல்ல. ரணில் யாழ்ப்பாண மக்களுக்குச் செய்த உபதேசங்களும் அவற்றைச் சில ஊடங்கள் தலைப்புச் செய்திகளாக்கியதுமே இங்கே புதினம்.

ரணில் சொன்னார்:

.....இலங்கையில் இப்பொழுதிருக்கும் ஆட்சி மாறினால் மட்டுமே தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும். யுத்தத்திற்குப் பின்னர் விரைவில் அரசியற் தீர்வு கிட்டப்படும் என்று அரசு காலத்துக்குக் காலம் கூறிவருகின்ற போதிலும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இன்றுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கம் ஒரு போதுமே அரசியற் தீர்வைப் பெற்றுத்தரப் போவதில்லை. வடபகுதி மக்கள் பெரும் சுமையுடனும் அச்சத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தென்னிலங்கையிலும்இதே நிலைதான் காணப்படுகிறது. ஊழல், லஞ்சம், அதிகாரம், குடும்ப ஆட்சி போன்ற எல்லாவற்றாலும் நாடு சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறது. நாடு இன்று அநீதியாளர்களின் கைகளிற் சிக்கியுள்ளது. இந்த அராஜகத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். அதற்காகத் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுப் போராட முன்வர வேண்டும்.... என்று.

ரணிலினுடைய இந்தக் கண்டுபிடிப்புக்கும் இந்த உபதேசத்திற்கும் அப்பாற் சென்று அவர் இப்போது உருவாக்கியிருக்கும் தமிழ் மக்களின் மீதான கருணை என்ற திரையை விலக்கிப் பார்த்தால் அவருடைய கடந்த காலக் காட்சிகள் தெரியும். மட்டும்மல்ல, ரணில் விக்கிரமசிங்கவையும் ஐ.தே.கட்சியின் கடந்த காலத்தையும் கண்டு கொள்ள முடியும்.

இதை வாசிக்கும்போது - குறிப்பாகத் தமிழ்பேசும் மக்களுக்கு, ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றியும் ஐ.தே.க. வைப்பற்றியும் எத்தகைய புரிதல் ஏற்படும்?

1. இனவன்முறையை உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது ஐ.தே.க.

2. 1977,83 இனக்கலவரங்களையும் 1981 யாழ். நூலக எரிப்புத் தொடக்கம் யாழ்ப்பாணத்தையே எரித்தது ஐ.தே.க.

3. சிறைச்சாலையில் படுகொலைகளைச் செய்தது ஐ.தே.க.

4. ஆயிரக்கணக்கான இளைஞர்களைத் தெருக்களிலே சுட்டுப்போட்டது தொடக்கம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைச் சிறையிலடைத்தது ஐ.தே.க. (பூஸா போன்ற சிறைச்சாலைகள் இதற்காக விசேடமாகத் திறக்கப் பட்டன).

5. படுகொலைகளும், பாலியல் வன்முறைகளும் செய்வதற்கான தாராள அனுமதியைப் படைகளுக்கு வழங்கி, இராணுவத்துக்கு உச்ச அதிகாரத்தை வலுப்படுத்தியது ஐ.தே.க.

6. எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கத்தையும் அவருடைய தமிழர் விடுதலைக் கூட்டணியையும் பயங்கரவாத முத்திரை குத்தி நாட்டை விட்டே தப்பியோட விரட்டியது ஐ.தே.க.

7. மேலும் எதிர்க்கட்சியாக விளங்கிய அனைத்துத் தரப்பையும் பலவீனப்படுத்தி, இறுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையையும் பறித்தது ஐ.தே.க.

8. வடக்குக் கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் முஸ்லிம் இளைஞர்களிற் சிலருக்கு ஆயுதம் வழங்கி நிலைமையை மோசமாக்கியது ஐ.தே.க.

9. மக்களை மோசமான முறையிற் கட்டுப்படுத்தும் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், கடல்வலயச்சட்டம் என்று ஏராளம் சட்டங்களை அறிமுகப்படுத்தியது ஐ.தே.க.

10. இந்த நாட்டிலே நிறைவேற்று அதிகாரம் என்ற அதிகாரமிக்க ஜனாதிபதி ஆட்சி (பேயாட்சி) முறையை அறிமுகப் படுத்தி, அதை அமுலாக்கியது ஐ.தே.க.

11. இலங்கை-இந்திய உடன்படிக்கையின் வழியாக இந்திய இராணுவத்தை இலங்கைக்குள்ளே இறக்கியதால் ஆயிரக் கணக்கான உயிர்களைப் பலியிட வைத்தது ஐ.தே.க.

12. மக்கள் வாழும் பகுதிகளின்மீது படையெடுப்புகளை மனிதாபிமானத்துக்கு அப்பாலான முறையில் (வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட ஒபரேஷன் லிபரேஷன்) செய்தது ஐ.தே.க.

13. குண்டு வீச்சுகளையும் விமானத் தாக்குதல்களையும் நடத்தியது ஐ.தே.க.

14. இனப்பிரச்சினைக்கு போரின் மூலமாக - அடக்குமுறையின் மூலமாகவே தீர்வு காணப்படும் என்பதை அரசியல் வழிமுறையாகக் கொண்டு செயற்பட்டது, செயற்படுவதற்கு முன்னுதாரணமாக இருந்தது ஐ.தே.க.

இப்படி ஐக்கிய தேசியக் கட்சி இலங்கைத் தீவுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் செய்த தவறுகள் ஏராளமுண்டு. இவை சாதாரணமானவையல்ல. எளிதில் மறந்து விடக்கூடியனவுமல்ல. இன்றைய இலங்கையின் சீரழிவிற்கும் கட்டற்ற அதிகாரத்துக்கும் தொடக்கப் புள்ளிகளை உருவாக்கியதில் ஐ.தே.கவிற்கே முக்கிய பங்குண்டு.

இந்த நாட்டிலே மிக மூத்த அரசியற் கட்சி ஐ.தே.க.தான். மிக நீண்டகாலம் ஆட்சியிலிருந்த கட்சியும் ஐ.தே.க. தான். அதேயளவுக்கு இந்த நாட்டிலே இனப் பிரச்சினை தொடக்கம், பொருளாதாரப் பிரச்சினைகள் வரையில் எல்லாப் பிரச்சினைகளையும் சிக்கலான நிலைமைக்குக் கொண்டு சென்றதும் ஐ.தே.க.வே.

இதனாற்தான் ஐ.தே.க. தன்னுடைய தலைவர்களை அதிகளவில் வன்முறைக்குப் பலி கொடுக்க வேண்டியிருந்தது. வன்முறையை விதைத்ததன் விளைவை பின்னாளில் அது அனுபவிக்க வேண்டியிருந்தது.

அதைப்போல எந்த அதிகார முறைமையை அது தன்னுடைய ஆட்சிக்காகப் பயன்படுத்தியதோ அதே அதிகார முறைமையினால் இப்போது அது தண்டனைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது.

இவ்வளவுக்கும், மேலே குறிப்பிட்டுள்ள ஐ.தே.கவின் தவறுகள் அல்லது அதனுடைய ஆட்சிச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளையில் திரு. ரணில் விக்கிரமசிங்க மிகப் பொறுப்பான பதவியில் ஐ.தே.க.விலிருந்தவர்.

இதையெல்லாம் இப்போது இலங்கை மக்களோ அல்லது தமிழ் பேசும் மக்களோ எப்படி இலகுவாக மறந்து விட்டனர்? என்று அவர் நம்புகிறார். இவை அந்தளவுக்குச் சாதாரணமானவையா?

ரணிலினாலேயே, ஏன் அந்தக் கட்சியினாலேயே ஜீரணித்துக் கொள்ள முடியாத அளவுக்கு ஐ.தே.கவின் கடந்த காலம் அதற்குத் தண்டனையை வழங்கியதைக் கூடவா அவர் மறந்து விட்டார்?

இப்போது கூட, தான் உருவாக்கிய சுற்றுச் சுவர்களுக்குள்ளிருந்தும் தான் வெட்டிய குழிக்குள்ளிருந்தும் தன்னால் உருவாக்கப்பட்ட நெருப்பு வளையங்களிலிருந்தும் வெளியேற முடியாமல் அந்தக் கட்சி இருப்பதைக் கூடவா ரணிலினால் புரிந்து கொள்ள முடியவில்லை?

இதையெல்லாம் மறந்து விட்டு, அல்லது மக்கள் மறந்திருப்பார்கள் என்ற நினைப்போடு புதிய கதைகளைச் சொல்ல முற்படுகிறார் அவர்.



இவை மட்டுமல்ல, விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வந்த போது, அதை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் யுத்த வெற்றியாகக் கொண்டாடிய போது அந்த வெற்றிக்கான அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது தானே என்று ரணில் பகிரங்கமாகவே அறிவித்திருந்தார்.

மேலும் புலிகளைப் பலவீனப் படுத்துவதற்காக புரிந்துணர்வு உடன்படிக்கையையும் போர் நிறுத்தத்தையும் தான் உருவாக்கியதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன், புலிகளிடமிருந்து கருணாவைப் பிரித்ததும் தான் என்றும் இதன்மூலம் கிழக்கை இலகுவாக அரச கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வர முடிந்ததென்றும் தொடர்ச்சியாக, கருணாவைக் கொண்டே புலிகளை மதிப்பிட்டதாகவும் அதை வைத்துக்கொண்டே அவர்களுடைய அணுகுமுறைகளையும் தந்திரோபயங்களையும் முறியடிக்கக்கூடியதாக இருந்ததாகவும் கூறினார் ரணில்.

இவையெல்லாம் எப்போது மறக்கப்பட்டன? தவறுகளையும் குற்றங்களையும் எப்போதும் முன்னிலைப் படுத்தினால்புதிய பிராந்தியங்களைநோக்கி நகர முடியாது என்பது அடிப்படையான உண்மை. இதை மறுக்க முடியாது. ஆனால்,தவறுகளையும் குற்றங்களையும் திருத்தாமலும் முன்னே நகர முடியாது. இதுவும் உண்மை. மறுக்க முடியாது இதையும்.

இதேவேளை யுத்தக் குற்றங்களைக் குறித்தும் கடந்த கால போர் மற்றும் இனமுரண்களைக் குறித்தும் இன்றைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தையும் இப்படித் தானே நோக்க வேண்டும்? என்று யாரும் கேட்கலாம். உண்மை. இந்தக் கேள்வியும் நியாயமானதே.

தலைமைப் பொறுப்பிலிருக்கும் - ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் எவரொருவர் தவறுகளைச் செய்தாலும் பொறுப்புகளைத் தட்டிக் கழித்தாலும் அது தண்டிக்கப்பட வேண்டியது. மன்னிக்க முடியாதது. குற்றத்திற்குரியதே. அதற்கான நெருக்கடிகளை இன்று தொடர்ச்சியாக ராஜபக்ஷ அரசாங்கம் எதிர்கொள்ள வேண்டியிருப்பது இதனாற்தான்.

ஆனால், இதற்குப் பதிலாக் . அல்லது மாற்றாக தான் ஆட்சிக்கு வரும்போது மாற்றங்களையும் தீர்வுகளையும் முன்வைப்பேன் என்று எத்தகைய அடிப்படையில், என்ன துணிச்சலில், எத்தகைய மன உறுதிப் பாட்டுடன் ரணில் வாக்குறு திகளை வழங்குகிறார்? அல்லது அறிவிப்புகளைச் செய்கிறார்?

அவருடைய கட்சிக்குள்ளேயே அவருக்கு இன்னும் ஏராளம் நெருக்கடிகள். அதையே சமாளிக்க முடியாமற் திணறும்போது, புதிய கனவுகளும் ஆசைகளும் அவருக்கு ஏற்படுவது சிரிப்பிற்கிடமானது.

அரசியலில் எதுவும் நடக்கும். இன்று வீழ்ச்சியடைந்திருப்பவர் எதிர்பார்க்க முடியாதவாறு எழுச்சியடைவர் என்பது எதிர்பார்க்கக் கூடியது. ஆனால், ரணில் சொல்லும் தீர்வுகளுக்கான நியாயம் இதை விட வேறானது.

அவர் கூறுகிறபடி, இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்க முடியும். நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவேன். அநீதியை ஒழிப்பேன். அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவேன் என்ற அவருடைய கதைகளுக்கான அடிப்படைகள் என்ன? இதற்கான உத்தரவாதங்கள் என்ன? அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின், உத்தரவாதங்கள்தான் என்ன?

இதுவரையான அரசியற் தவறுகளுக்கும் நாடு சிதைந்ததற்குமான தார்மீகப் பொறுப்பை அந்தக் கட்சியோ அல்லது அதனுடைய எந்தத் தலைவரோ இதுவரையில் ஏற்றுக் கொண்டதாக இல்லை. ஏன் ரணில் கூட இதுகாலவரையான தம்முடைய தவறுகளுக்காக வருத்தம் தெரிவித்ததில்லை. அதுதான் போகட்டும்.

ஆகக்குறைந்தது, அவர் கூறுகின்றதை மெய்ப்பிப்பதற்கான அடிப்படைக்குரிய புதிய திட்டங்களையும் நிலைப்பாடுகளையுமாவது அவர் அறிவிக்கட்டும்.

இனப்பிரச்சினை தொடர்பாக, போர்க்குற்ற விவகாரங்கள் தொடர்பாக, பொருளாதார மறுசீரமைப்புத் தொடர்பாக, இன ஐக்கியம் அல்லது நாட்டின் சுபீட்சம் தொடர்பாக என ஏதாவது ஒன்றைப் பற்றியேனும்.

தேர்தற் காலங்களில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தமிழ், முஸ்லிம், சிங்களக் கட்சிகளுடன் பேச்சுகளை நடத்துகின்ற ரணில், இனமுரணைத் தீர்த்துக்கொள்வதற்காக ஏன் பேச்சுகளை முன்னெடுக்கக்கூடாது. அல்லது அதற்கான அடிப்படையை உருவாக்குவதற்காகத் தன்னுடைய பாத்திரத்தை வழங்கக்கூடாது. நாட்டில் மக்களின் சுமைகளைக் குறைப்பதற்கும், ஜனநாயக உரிமைகளை மீட்பதற்கும் அவர் எத்தகைய போராட்டங்களை நடத்தினார். அல்லது அதற்குத் தயாராக உள்ளாரா?

எதற்கும் அவரால் பதிலளிக்க முடியாது. அத்தகைய உறுதிப் பாட்டையும் நிலைப்பாட்டையும் புதிய பார்வையையும் ஐ.தே.க இன்னும் கொள்ளவில்லை. அதைப் பற்றியே அது சிந்திக்கவும் இல்லை. எனவேதான் அது மிக மிகப் பின்னடைந்து சிதைந்து செல்கிறது.

ஒழுங்கான தலைமைத்துவம் இன்றி, ஒழுங்கான செயற்பாடின்றி இருப்பதற்குக் காரணம் சரியான உறுதிப்பாட்டையும் நீதியான

(15பக்கம் பார்க்க)



# சுருண்டது இங்கிலாந்து இலங்கை வெற்றி

(காலி)

ரங்கன ஹேரத், ரண்டிவ் ஆகியோரின் சிறப்பான சுழற்பந்து வீச்சின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான காலி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 75 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இலங்கை, இங்கிலாந்துஅணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்டடெஸ்ட்தொடரின் முதலாவது போட்டி காலியில் நடைபெற்றது.

340 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி நிதானமாக ஆடியது. குறிப்பாக ட்ரொட் பொறுப்பாக இங்கிலாந்து அணிக்கு நம்பிக்கை தரும் வகையில் ஆடியிருந்தார். இருப்பினும் ரங்கண ஹேரத், ரண்டிவ் ஆகியோரின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய இங்கிலாந்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் நேற்றைய நான்காம் நாளில் இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 264 ஓட்டங்களைப் பெற்று, 75 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது. இதில் ட்ரொட் 226 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் அடங்கலாக 112 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் பீற்றர்சன் 30, மட் ப்ரியர் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் 38 ஓவர்கள் பந்து வீசி 97 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் ரண்டிவ் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹேரத் தெரிவானர். இலங்கை முதல் இனிங்ஸ் 318. இரண்டாவது இனிங்ஸ் 214. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 193.

# காலிறுதியில் கரோலின்

(மயாமி)

அமெரிக்காவில் நடக்கும் மயாமி ஓபன் ரென்னிஸ் போட்டித் தொடரின் காலிறுதிக்கு டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி தகுதிபெற்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த காலிறுதியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸிடன் மோதிய கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) 6,4, 6,4 என்ற நேர் செட்களில் வென்றார். ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில் நட்சத்திர வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) 6,4, 6,4 என்ற நேர் செட்களில் ஜப்பானின் நிஷிகோரியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். முன்னணி வீரர்கள் ஜோகோவிச் (செர்பியா), சோங்கா (பிரான்ஸ்), ஆண்டி மர்ரே (இங்கிலாந்து), மார்டி பிஷ் (அமெரிக்கா ஆகியோரும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இதேவேளை, ஆண்கள் இரட்டையர் பிரிவு அரை இறுதியில் விளையாட இந்தியாவின் மகேஷ் பூபதி , ரோகன் போபண்ணா ஜோடி தகுதி பெற்றது. காலிறுதியில் லோத்ரா ஸிமான்ஜிக் ஜோடியுடன் மோதிய பூபதி ஜோடி 2,6,6,3,10,8 என்ற செட் கணக்கில் கடுமையாகப் போராடி வென்றது. மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் ரஷ்யாவின் மரியா ஷ்ரபோவா 6,3, 6,0 என்ற நேர் செட்களில் நா லியை (சீனா) எளிதாக வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.



இந்திய கிரிக்கெட் சபையினால் ராகுல் ராவிட்டுக்கு நடத்தப்பட்ட பாராட்டுவிழாவின் போது, நினைவுப் பரிசு வழங்குவதைக் காணலாம்.

# எதிராளிகளை வீழ்த்துவாராம் சபதமெடுக்கிறார் இவானோவிச்

அடுத்து வரும் ரென்னிஸ் தொடர்களில் வலுவான வீராங்கனையாக களமிறங்கி எதிராளிகளை வீழ்த்துவேன் என செர்பியாவின் இவானோவிச் தெரிவித்தார்.

விம்பிள்டனில் பாதியில் வெளியேறியது மிகுந்த ஏமாற்றமான முடிவு. அடுத்தடுத்து போட்டிகளில் விளையாட வேண்டிய நிலையில், காயம் பெரிதும் வேதனைப்படுத்தியது. அன்று மிகுந்த வலி இருந்ததால் தொடர்ந்து விளையாட முடியாமல் வெளியேறினேன். இந்தக் காயம் இவ்வளவு இடைஞ்சல் தரும் எனத் தெரியாது. ஆனால் பெரிய அளவில் காயம் இல்லை. சதையில் சிறிய அளவில் மட்டும் கிழிசல் இருந்தது மகிழ்ச்சியாக இருந்தது.

வீனஸ் வில்லியம்ஸ் திறமையைப் பாராட்டுகிறேன். புல்தரையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தக்கூடியவர். பந்து செல்லும் திசையில் சென்று அதிக ஆற்றலுடன் திருப்பி அனுப்புவார்.

விம்பிள்டனில் இம்முறை சமந்தா ஸ்டோசருக்கு எதிரான எனது ஆட்டம், இந்த ஆண்டின் மறக்க முடியாத போட்டியாகும். புதிய பயிற்சியாளர் வந்த பிறகு எனது ஆட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

குறுகிய காலத்தில் கிடைத்த ஓய்வுக்குப் பிறகு, மீண்டும் சாதிக்க முயற்சிப்பேன் எனவும் அவர் தெரிவித்தார். .



# கிளார்க் ஒப்பந்தம்

புனே வாரியர்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த சகல துறை வீரர் யுவராஜ் சிங், புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வருவதால் அவருக்கு பதிலாக அவுஸ்ரேலிய டெஸ்ட் அணி கப்டன் மைக்கல் கிளார்க் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

கிளார்க்கை ஒப்பந்தம் செய்ததில் மகிழ்ச்சி அடைவதாக புனே வாரியர்ஸ் அணி நிர்வாகத்தினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# கும்ப்ளேயுடன் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சி

(பெங்களூர்)

இந்திய அணியின் முன்னாள் நட்சத்திரச் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ப்ளேயுடன் இணைந்து செயற்படுவது குறித்து மகிழ்ச்சியடைவதாக இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், உலக சாதனையாளருமான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். போட்டிகளில் முத்தையா முரளிதரன் - ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி சார்பாக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அனில் கும்ப்ளேயும் தானும் இணைந்து 2000இற்கு மேற்பட்ட டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேசப் போட்டி விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருப்பதாகத் தெரிவித்த முரளிதரன், கும்ப்ளேயுடன் இணைந்து செயற்படுவது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்தார்.

ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் நிர்வகிப்பவர்களில் ஒருவராக கும்ப்ளே செயற்படும் நிலையில், இது சிறந்த சந்தர்ப்பம் எனவும் தெரிவித்தார்.

சர்வதேசப் போட்டிகளில் ஓய்வுபெற்றதன் பின் கொச்சி அணி சார்பாக சிறிதுகாலம் விளையாடியதாகவும், பின்னர் இங்கிலாந்து பிராந்திய அணியான குளொசெஸ்ரெஸ்செயார் அணிக்காக ருவென்ரி 20 போட்டிகளில் பங்குபற்றியதாகவும் தெரிவித்த முரளிதரன், நியூசிலாந்தில் ருவென்ரி 20 போட்டிகளில் பங்குபற்றிய பின்னர் பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றியதாகவும் தெரிவித்தார்.



# சச்சின் டெண்டுல்கர் பங்கேற்காதது ஏன்?

(மும்பை)

சர்வதேச போட்டிகளில் இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்ற நட்சத்திர வீரர் ராகுல் ராவிட்டுக்கு, கிரிக்கெட் சபை சார்பில் மும்பையில் பாராட்டு விழா நடைபெற்றது. இதில் கும்ப்ளே, கங்குலி, லக்ஸ்மன், டோனி மற்றும் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த விழாவில் சச்சின் கலந்து கொள்ளாததால் சர்ச்சை எழுந்தது. ஒரு போட்டியில் சச்சின் இரட்டைச் சதம் அடிக்கும் வாய்ப்பு இருந்த நிலையில் (194*), கப்டனாக இருந்த ராவிட் இன்னிங்சை நிறுத்திக் கொண்டார்.

அதை மன தில் வைத்துதான் விழாவை சச்சின் புறக்கணித்துவிட்டதாக பேச்சு எழுந்தது.

இந்த நிலையில், டாக்டரிடம் ஆலோசனை பெறுவதற்காக சச்சின் லண்டன் சென்றுள்ளதாகவும், இதற்காக சில மாதங்களுக்கு முன்பாகவே பயண ஏற்பாடுகளை செய்திருந்ததால் ராவிட் பாராட்டு விழாவில் அவரால் பங்கேற்க முடியவில்லை என்றும் கிரிக்கெட் சபை தலைமை செயல் அதிகாரி ரத்னாகர் ஷெட்டி நேற்றுத் தெரிவித்தார். சச்சின் நாளை நாடு திரும்புவார். மும்பை இந்தியன்ஸ் பயிற்சி முகாமில் பங்கேற்பதுடன் ஐ.பி.எல். டி20 5ஆவது சீசனில் முழுவதுமாக விளையாடுவார் என்று மும்பை இந்தியன்ஸ் நிர்வாகமும் அறிவித்துள்ளது.



# கடற்படை கரப்பந்தாட்ட சம்மேளன உப செயலாளராக மனோகரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்படை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் வரலாற்றில் முதன் முறையாக அதன் நிறைவேற்றுக் குழுவுக்கு உபசெயலாளராக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் கி. மனோகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற இலங்கைக் கடற்படை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் பொதுக்கூட்டத்தில் மேற்படி பதவிக்காக இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், இப்பதவியைப் பெற்றுக் கொள்ளும் முதலாவது தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது



இளவயதில் இருந்து கரப்பந்தாட்டம் விளையாடுவதில் மிகவும் ஆர்வமுடையவராக இருந்ததுடன், 17 வயதிலேயே தேசிய மட்டத்திலான கரப்பந்தாட்டப் போட்டிகளில் விளையாடுவதற்கு தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்து 20 வருடங்களாக தேசிய மட்ட கரப்பந்தாட்டம் விளையாடி யாழ். மாவட்டத்திற்குப் பெருமை சேர்ந்தவராவார்.

1969இல் தன்னை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தில் இணைத்துக் கொண்ட இவர்,அக்கழகத்தின் செயலாளராகவும், தலைவராகவும் கடமையாற்றி இன்றுவரையும் அதன் தலைமைப் பொறுப்பில் பணியாற்றி வருகின்றார். 1990ஆம் ஆணடிலிருந்து கடந்த 11 ஆண்டுகளாக யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளராக சிறப்பாகப் பணியாற்றி,இவ்வருடம் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவராகப் பதவி ஏற்றுள்ளார்.

இதேவேளை, இலங்கை கரப்பந்தாட்ட வரலாற்றில் முதன் முறையாக காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் வீராங்கனை பாலச்சந்திரன் புகழரசி இலங்கை தேசிய அணிக்குத் தெரிவு செய்யப்பட்டு, கடந்த வருடம் வியட்நாம் சென்று கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார். இவரை தேசிய அணியில் இடம் பெறச் செய்வதற்கு மனோகரன் பெரும் பங்காற்றியதுடன் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## புதிய நிர்வாகம் இன்று தெரிவு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் விளையாட்டுப் பேரவையின் புதிய நிர்வாகத் தெரிவு இன்றைய தினம் 3.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ரி. ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தற்கால விளையாட்டுத் திறன் தொடர்பான முக்கிய விடயங்கள் சிலவும் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளதால், பதிவு செய்யப்பட்ட கழக நிர்வாகத்தினரை இந்த நிர்வாகத் தெரிவில் தவறாது கலந்து கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுத்துறை அதிகாரி த. வசந்தன் தெரிவித்துள்ளார். (116)

## மாவட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி ஆறு ஓட்டங்களினால் வெற்றிபெற்றது.

விலகல் முறையில் இடம்பெற்று வரும் இப்போட்டி 15 ஓவர்களைக் கொண்ட போட்டியாக இடம்பெற்று வருகின்றது.

இப்போட்டி 13ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனுசாந் ஏழு சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் நிதர்சன் 24 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கோபி, கார்த்தி, கோகுலன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய உடுவில் பிரதேச செயலக அணியும் மிக அற்புதமாக ஆடிய வெற்றியை ஆறு ஓட்டங்களினால் கோட்டை விட்டனர். இதில் ஜெயசீலன் 25, டேமியஸ் 21, வரன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாவிதரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (எஸ்.பி.)

## உன்னத வீதியோட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் உன்னத வீதியோடடம் அடுத்த மாதம் 21ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் யாழ். மாவட்டப் போட்டியாளர்களை அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளர் எம்.ஆர். மோகனதாஸிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படவுள்ளமையால் போட்டியாளர்களை விரைந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இப்போட்டி ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## சைக்கிள் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்களப் புத் தாண்டை முன்னிட்டு வடமாகாண வீரர்களுக்கான சைக்கிள் ஓட் டம் நாளை மறுதினம் நடை பெறவுள்ளது.

இச்சைக்கிள் ஓட்டம் நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலக முன்றலில் நிறைவடையவுள்ளது.

## கால்பந்து போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் அமைந்துள்ள 521ஆவது படைப்பிரிவினரால் நடத்தப்பட்டு வரும் இப்போட்டிகள் அன்றைய தினம் ஹாட்லிக் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஏற்கனவே, நடைபெற்ற 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் ஹாட்லிக் கல்லூரி மற்றும் உடுப்பிட்டி ஏ.எம்.ஜி. அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் பங்கு கொள்ளும் அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எஸ்.பி.)

## நான்கு கட்டங்களாக வடமாகாண விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளை இந்தமுறை நான்கு கட்டங்களாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

முதற்கட்டப் போட்டிகள் எதிர்வரும் 08ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இதற்கான சுற்றுநிருபங்கள் வடமாகாணத்திற்கு உட்பட்ட கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களுக்கு வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

முதலாம் சுற்றில் ஆண்கள், பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டிகள் வவுனியாவில் ஆரம்பமாவதைத் தொடர்ந்து ஏனைய போட்டிகள் நடைபெறவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஏனைய போட்டிகளின் விபரங்கள் வருமாறு

ஆண்கள், பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் ஜூன் மாதம் 06ஆம் திகதி

ஆண்கள், பெண்களுக்கான மட்டுப்படுத்திய மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகள் ஜூன் மாதம் 07ஆம் 08ஆம் திகதிகளில்.

ஆண்களுக்கான பளுத் தூக்கும் போட்டிகள் ஜூன் மாதம் 08ஆம் 09ஆம் திகதிகளில்.

ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் ஜூன் மாதம் 09ஆம் 10ஆம் திகதிகளில்.

ஆண்கள், பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டிகள் ஜூன் மாதம் 11ஆம் 12ஆம் 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

## வலய மட்ட பெண்கள் கால்பந்து இறுதிக்குத் தெரிவான அணிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் விளையாட மானிப்பாய் மகளிர் கல்லூரியும் இளவாலை சென்ஜோசப் மகா வித்தியாலயமும் தகுதிபெற்றுள்ளன.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை அரையிறுதி ஆட்டங்கள் இடம்பெற்றன.

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு கோலை அடித்த நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது. இரண்டாம் பாதி ஆட்டத்திலும் மேலும் ஒரு கோலை மானிப்பாய் இந்துக் கல்லூரி அடித்த நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 02க்கு 00 என்ற கோல்கணக்கில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் மாதகல் சென் ஜோசப் மகா வித்தியாலயமும் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களைப் பெற்று முன்னிலையில் இருந்த சென் ஜோசப் மகா வித்தியாலயம் இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் இரண்டு கோல்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. ஆட்ட நிறைவில் மாதகல் சென்ஜோசப் மகா வித்தியாலயம் 04க்கு 00 என்ற கோல் கணக்கில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றது.





பூநகரிக் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின்போது பாண்ட் வாத்திய இசையுடன் நடைபெற்ற வீர, வீராங்கனைகளின் அணி நடை நிகழ்வையும், வெற்றிபெற்ற வீராங்கனைகளுக்கான பரிசில்களை கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரதாப்சிங் விஸ்னு வழங்குவதையும் காணலாம். இப்போட்டிகள் கடந்த 13,14,15ஆம் திகதிகளில் முழங்காவில் ம.வி. மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (112)


நோக்கம், நிச்சயமாக சந்தேகத்துக்கு உரிய ஒன்றாகவே இருக்கின்றது.

முதலில் அமெரிக்கா கொண்டு வர உத்தேசித்த தீர்மானம், இலங்கை அரசு இறுதி யுத்தகாலத்தில் இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை கண்டிப்பதாகவும், என்பதையே வாக்களிப்பு முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்கா தனது முழு வல்லமையையும் பயன்படுத்தி, சின்னஞ்சிறு நாடான இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த ஒரு தீர்மானம், கிட்டத்தட்ட தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக "வென்றெடுத்ததின்" மூலம், தமிழகத் தமிழர்களையும் உள்ளடக்கிய மிகப்பெரிய அளவிலான தனித் தமிழ் அரசு ஒன்றுக்கான அத்திவாரத்தை இட்டுள்ளனர். அதன் மூலம் எதிர்காலத்தில் இந்தியா பாரதூரமான

# இந்தியா காலை வாரியதா? அல்லது சூழ்நிலைக் கைதியாகியதா?

**வானவில் மார்ச் 15 இதழ் தலையங்கத்திலிருந்து**

ஜெனிவா தீர்மானம் வெளித் தோற்றத்துக்குப் பார்க்கையில் இலங்கைக்கு உதவுவது போலத் தோன்றினாலும், உண்மையில் இதை ஒரு "சீனி பூசிய தோட்டா" என்றுதான் சொல்ல வேண்டும். இலங்கை நியமித்த கற்றுக்கொண்ட ஐ.நா.செயலாளர் பான் கீ மூன் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமித்த தருஸ்மன் குழு தெரிவித்த ஆலோசனைகளின் அடிப்படையில் சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கோருவதாகவும்



பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை, இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் என அமெரிக்கத் தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டு 3 மாதங்களே ஆகியுள்ள சூழ்நிலையில், அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் இலங்கைக்கு போதிய கால அவகாசம் வழங்காமல் இத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததின் உள்ளார்ந்த இருக்கும் எனச் சொல்லப்பட்டது. ஆனால் அத்தகைய ஒரு தீர்மானத்துக்கு பெரும்பாலான நாடுகள் ஆதரவளிக்கத் தயாரில்லை என அறிந்துகொண்ட பின்னர்தான், அமெரிக்கா இலங்கையின் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என ஒரு தீர்மானத்தைத் தந்திரோபாயமாகக் கொண்டுவந்ததாகத் தெரியவருகிறது.

அப்படியாகத் தந்திரோபாய ரீதியில் கொண்டு வந்த அமெரிக்காவின் தீர்மானத்துக்குக்கூட, அவர்கள் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை அரைவாசி வாக்குகளையே பெற்றுள்ளமை நிச்சயமாக அமெரிக்காவுக்கு ஒரு தோல்விதான்.

தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த 15 நாடுகள் மட்டுமல்லாமல், வாக்களிப்பில் கலந்து கொள்ளாத 8 நாடுகளும்கூட அமெரிக்காவின் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதே உண்மையாகும். உதாரணமாக, ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பில் பாலஸ்தீனம் இடம் பெறுவதை அமெரிக்கா தடுக்க எவ்வளவோ பிரயத்தனம் செய்தும், பாலஸ்தீனம் மிகப்பெரும்பான்மையான ஆதரவுடன் உறுப்புரிமை பெற்றதிலிருந்தே, உலக நாடுகள் மத்தியில் அமெரிக்காவின் செல்வாக்கை அறிந்துகொள்ள முடியும்.

இந்தியா அமெரிக்கத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்திருக்குமானால், நிச்சயம் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருந்த நாடுகளும் அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருக்கக் கூடும். அதன் மூலம் அமெரிக்கத் தீர்மானம் நிச்சயம் தோற்கடிக்கப்பட்டிருக்கும். இந்தியாவைப் பொறுத்தவரையில் அமெரிக்கத தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பதெனவே முதலில் தீமானித்திருந்தது. இந்தியாவின் இந்த நிலைப் பிரச்சினைகளைத் தனது தென்பகுதியில் எதிர்நோக்கப் போகிறது.

அமெரிக்கா நிறைவேற்றியுள்ள இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் மூலம், எதிர்காலத்தில் பல பாரிய அரசியல் மாற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு. இந்தத் தீர்மானத்தின் காரணமாக இலங்கை மக்கள், முக்கியமாக இலங்கையின் சனத்தொகையில் 72 வீதமாக இருக்கும் சிங்கள மக்கள் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அமெரிக்க எதிர்ப்பாளர்களாக மாறக்கூடிய வாய்ப்புண்டு.

அதேநேரத்தில், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், புலம்பெயர் புலி அமைப்புகளும், தமிழக அரசியல் கட்சிகளும் எடுத்த இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டால், யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையில் உருவாகி வந்த தேசிய இனங்களுக்கிடையிலான ஐக்கியம் பெரும் பின்னடைவைச் சந்திக்கும். தமிழர்கள் மீது பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு நீண்ட காலமாக இருந்து வந்த சந்தேகம் மேலும் வலுப்பெறும்.

மறுபக்கத்தில் இந்தியா எடுத்த நிலைப்பாட்டால், இலங்கை மக்கள் வரலாற்றுக் காலம் முதல் இந்தியா மீது கொண்டிருந்த சந்தேகமும் வலுப்பெறும். ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் உருவாக்கவே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததாகச் சொன்னாலும்,

**இலங்கையின் சனத்தொகையில் 72 வீதமாக இருக்கும் சிங்கள மக்கள் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அமெரிக்க எதிர்ப்பாளர்களாக மாறக்கூடிய வாய்ப்புண்டு.**

பாட்டை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணாவும், நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியும் நாடாளுமன்றத்தில் தெளிவாகக் கூறியிருந்தனர்.

ஆனால் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு கமிட்டியும், அவ்வரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. உட்பட அனைத்து தமிழக அரசியல் கட்சிகளும் மத்திய அரசை மிரட்டியதால் வேறுவழியின்றி இந்திய அரசு தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்ற வேண்டியதாகிவிட்டது.


உண்மையில் இந்தியாவின் நிலைப்பாடு இலங்கைக்குச் சார்பானது என்ற போதிலும், இந்தியா எடுத்த இரண்டுபட்ட நிலை அதன் வரலாற்றில் முதற்தடவையாக அதற்கு ஏற்பட்ட மிகப்பெரும் இராஜதந்திரத் தோல்வியாகும். இதற்கு முதல் இந்தியா எந்தவொரு தனிப்பட்ட நாட்டுக்கும் எதிரான தீர்மானங்களை ஆதரித்து வாக்களித்தது கிடையாது. அத்தோடு தனது அண்டைய நட்பு நாடான இலங்கைக்கு எதிராகவும் செயற்பட்டது கிடையாது.

அந்தவகையில் இந்தியா சூழ்நிலைக் கைதியாகி இலங்கைக்கு எதிராக வாக்களித்ததின் மூலம், வருங்காலத்தில் மிகவும் பாரதூரமான பிரச்சினைகளை அது எதிர்நோக்கக்கூடும். முன்னர் ஏகாதிபத்திய சக்திகள் விடுதலைப் புலிகள் மூலம் இலங்கையில் ஒரு தனிநாட்டை உருவாக்கி அதைத் "தென்னாசியாவின் இஸ்ரேல்" ஆக உருவாக்கத் திட்டமிட்டிருந்தனர். இப்பொழுது அந்த சக்திகள் முழு தமிழக அரசியல் சக்திகளையும் உண்மையில் அதற்கெதிரான நிலைமைகளே உருவாகப் போகின்றன. அதேநேரத்தில் இந்தத் தீர்மானத்தின் மூலம் இலங்கையில் தமது பிடியை இறுக்கலாம் என்ற அவர்களது கனவும் நிறைவேறப் போவதில்லை. மாறாக இலங்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலையே மேலோங்கப் போகின்றது.

மறுபக்கத்தில் ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் தேவையற்ற முறையில் மூக்கை நுழைப்பதற்கான சூழ்லை ஏற்படுத்திக் கொடுத்ததில், இலங்கை அரசுக்கும் முக்கியமான பங்கு உண்டென்பதை மறுக்க முடியாது. போர் முடிவுற்று மூன்று வருடங்களாகியும் இனப்பிரச்சினைக்கு விரைந்து ஒரு தீர்வைக் காண்பதில் இலங்கை அரசின் அசமந்தப்போக்கு, பிற்போக்கு பிரிவினைவாத சக்திகளுக்கும் அவர்களின் பின்னால் நின்ற ஏகாதிபத்திய சக்திகளுக்கும் வாய்ப்பைக் கொடுத்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தேசிய இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பதின் மூலம், அனைத்து இன மக்களையும் ஓரணியில் திரட்டி இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்திய சதி முயற்சிகளை வெற்றிகரமாத் தோற்கடிக்க முடியும். இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டு வந்த அமெரிக்காவை வசை பாடுவதிலோ, காலை வாரிய இந்தியாவை கண்டிப்பதிலோ காலத்தை விரயம் செய்வதைவிட, இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு ஓர் உரிய தீர்வைக் காண்பதில் கரிசனையுடன் செயற்படுவதே இன்றைய உடனடித் தேவையாகும்.

## புரட்சியாளர்!



சுமார் 2500 வருடங்களுக்கு முன்பு கௌதம புத்தர் மானுடத்தை நோக்கி இவ்வாறு கூறுகிறார். துன்பத்தின் மூல காரணங்கள் மூன்று: அவை பேராசை, அறியாமை மற்றும் கோபம். நாம் இவற்றை நம்முடைய சிந்தனையிலும் பேச்சிலும் செயலிலும் வெளிப்படுத்துகிறோம். புத்தமதம் வலியை மேம்போக்காக குறைக்கும் வேலையைச் செய்யவில்லை. உண்மையாக வாழ்வது எப்படி என்பதை புத்தர் உரைத்தார். உன்னத வாழ்க்கை என்பது வலியற்றதல்ல அதே சமயத்தில் அர்த்தமுள்ளதாகும்.

புத்த வரலாற்றை ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை உருவாக்குவதற்குப் புத்தர் பல வழிகளிலும் பங்களித்துள்ளதாக கூறுகிறார்கள். சாசுவதமான விடுதலையை உலக சமுதாயத்துக்குக் கொண்டுவர அவர் பாடுபட்டார். மனித சமுதாயம் போற்றிய அந்த மாமனிதர் கடவுளைப் பற்றி ஆராயாமல் மனிதனின யதார்த்த வாழ்வை சிந்தித்த முதல் புரட்சியாளர் அவர்.

யுத்தத்துக்கான மூலத்தையும் இவ்வாறு கூறுகிறார்: மனித விருப்பம் கலைகளில் தொடங்கி கடைசியில் போரில் முடிகிறது. பண்பாட்டில் தொடங்கி மயக்கத்தில் முடிகிறது.

இன்று நம்பிக்கையூட்டும் விதமாய் ஏதேனும் ஒன்று நடக்காதா என்று ஏங்குகிறோம். இத்தகைய புத்த பாரம்பரியத்தை கொண்ட தேசத்தில் மூன்று ஆயுதக் கிளர்ச்சிகள் நடைபெற்றதும், பெரும் இரத்தக்களரி ஏற்பட்டதும் வரலாற்றின் துரதிர்ஷ்டம்.

- தேவன்



## பாரதி கணக்கு

மகாகவி பாரதியார் தான் சிறிது காலம் நடத்தி வந்த "இந்தியா" என்ற இதழுக்கு நான்குவிதமான சந்தா நிர்ணயம் செய்திருந்தார். சாதாரண மக்களுக்கு ரூபா 3, மாதச்சம்பளம் வாங்குவோருக்கு ரூபா15, ஜமீன்தார் மற்றும் பணக்காரர்களுக்கு ரூபா30, அரசாங்க ஊழியர்களுக்கு ரூபா 50.

# மதத் தலைவர்களில் பெண் உண்டா?



காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசி யார் போன்ற நாயன்மார்களும், ஆண்டாள் போன்ற ஆழ்வார்களும் இன்னும் திலகவதியார், பூம்பாவையார், மீரா போன்றவர்களும் சிறந்த பக்தைகளாக இருந்தனர். ஆனால், இவர்கள் யாரும் புதிதாக எந்த மதத்தையும் ஸ்தாபித்தவர் களில்லை... ஏற்கனவே இருந்த மதங்களில், சிறப்புடன் தெரிய வந்தவர்கள்.

ஆனால், வரலாற்றில் ஒரு மதத்தையே தோற்றுவித்த பெண்மணி ஒருவரும் இருக்கிறார். "மேரி பெக்கர் எட்டி" என்பது அந்த பெண் பெயர். வாழ்க்கையில் அவள் கண்டதெல்லாம் நோய், துன்பம், சோகம்தான். கல்யாணமானதும் கணவன் இறந்தான் மறுமணம் செய்தாள். அவன் ஓடி விட்டான். ஒரே குழந்தை... வறுமை வாட்டியது. குழந்தையையும் தத்துக் கொடுத்து விட்டாள்.

ஒரு நாள் கடுங்குளிரில் நடுங்கியபடி, நடைபாதையில் போய் கொண்டிருந்தாள். நடைபாதையெல்லாம் கூட ஐஸ்கட்டியால் உறைந்து போயிருந்தது. வழுக்கி விழுந்தாள். நினைவு பிசகியது. முதுகெலும்பில் பலமான அடி. அதனால், வலிப்பு நோய் வந்து விட்டது...

மருத்துவர்கள் பார்த்துவிட்டு.... "பிழைப்பது கஷ்டம். பிழைத்தாலும் நடப்பது கஷ்டம்..." என்று கூறி விட்டனர். மரணப் படுக்கையிலேயே பைபிளை புரட்டிப் பார்த்தாள், மேரி பெக்கர் எட்டி. அவள் கண்ணில் தட்டுப்பட்ட விஷயம் இதுதான்

"இயேசுவின் முன்னால், பாரிச வாயுவால் பீடிக்கப்பட்ட நோயாளியைப் படுக்கையோடு கொண்டு வந்தனர். இயேசு... "மகனே, தைரியமாய் இரு... உன் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்படும். எழுந்து வீட்டுக்கு நட..." என்றார். அவர் கூறியபடியே எழுந்து சென்று விட்டான் நோயாளி.

இச்சம்பவத்தை அறிந்த மாத்திரத்தில், மேரி எட்டிக்குக் கட்டுக்கடங்காத சக்தி, ஊற்றெடுத்ததை உணர்ந்தார். நம்பிக்கை வேகம் பீறிட்டது. மரணத்தின் வாசலில் திணறியவர், திடீரென்று நோய் நீங்கி, அன்றைக்கே படுக்கையை விட்டு எழுந்தார்.

அதன் பிறகு தான், "கிறிஸ்டியன் சயன்ஸ்" என்ற மதத்தை ஸ்தாபித்தார். "நோய் என்று ஒன்றுமே கிடையாது, அது பொய். ஆகவே, அதை குணப்படுத்த மருந்து கொடுக்க வேண்டியதில்லை..." என்பதே, இந்த மதத்தின் முக்கிய போதனை.

பொய்யில்லை, நம்புங்கள்... அமெரிக்காவில் மட்டும் இந்த மதத்தினருக்கு, 12 ஆயிரத்து, 500 தேவாலயங்களுக்கு மேல் இருக்கின்றன. பிற நாடுகளிலும் இந்த மதத்தினர் ஏராளமாக இருக்கின்றனர்.

# தமிழ் இசைக்கருவிகள்



**மத்தளம்:**

மத்து என்பது ஓசைப்பெயர். இதற்கும் பழங்காலத்தில் முட்டு என்ற பெயருண்டு. சந்தனம், பலா, கொண்டல், அகில், வேம்பு, தென்னை ஆகியவற்றால் மத்தளம் செய்யப்படுகிறது.

**நாதசுரம்:**

நாதசுரம் என்னும் இசைக்கருவி சங்க நூல்களில் காணப்பெறவில்லை. கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வெளிவந்த, "பரத சங்கிரம்" என்ற நூலில்தான் நாதசுரம் என்ற பெயர் இடம்பெறுகிறது. சாலமரம், ஆலா, ஆச்சா மரங்களிலிருந்து நாதசுரம் உருவாக்கப்படுகிறது.

**யாழ்:**

தொல்காப்பியம் தோன்றுவதற்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே யாழ் உருவாயிற்று. 5000 ஆண்டுகளுக்கு முந்தைய ஹரப்பா நாகரிகத்தில் யாழ் காணப்படுகிறது. 21 நரம்புகள் கொண்டது பேரியாழ். 17 நரம்புகள் கொண்டது மகரயாழ். 16 நரம்புகள் கொண்டது சகோடயாழ். 7 நரம்புகளைக் கொண்டது செங்கோட்டி யாழ்.


**வில்யாழ்:**

5000 ஆண்டுகளுக்கு முன்னரே வில்யாழ் தோன்றியது. குறிஞ்சி நில மக்களே முதன்முதலில் பண் இசைத்தனர். அமராவதி கல் ஓவியத்தில் யாழ் உருவம் காணப்படுகிறது. பழங்காலத்தில் போர்க் கருவியாகவும் வெற்றி முரசாகவும் இந்த வில்யாழ் பயன்பட்டது.

**வீணை:**

வீணை 300 ஆண்டுகளாகத்தான் பயன்பாட்டில் உள்ளது. தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கரே வீணையை உருவாக்கினார் என்பர். யாழின் மறுவடிவமே வீணை என்பதும் பலரின் கருத்து. பலா, கருங்காலி, செம்மரம், கதிர்மரம், லியன், மூங்கில், பிரம்பு முதலியவை வீணை செய்ய ஏற்ற மரவகைகளாகும். தஞ்சாவூரே வீணைக்குப் பெயர் பெற்றது.

# எழுதும் கலை -9



1. உள்ளத்தின் நேர்மையோடு, தன்னை இழந்து, கதாபாத்திரமாக மாறி எழுதும் ஆசிரியனின் பாத்திர சிருஷ்டிகள் சரித்திரப் பிரசித்தி பெற்ற பாத்திரங்களை விட, உண்மையாக உயிர் படைத்து உலவும் நபர்களாகத் தெரிவார்கள்.

2. வாழ்க்கையின் உன்னதம் அல்லது வீழ்ச்சிகளைப் பற்றியே எழுதவேண்டும் என்பதில்லை. சாதாரண மன நெகிழ்ச்சிகளையுமே மனோதர்ம நூலில் கோர்த்து அழகிய படைப்பாக்கி விடலாம்.

3. கதைக்கு வேண்டியது - உண்மைக்கு, எதார்த்த நிலைக்குப் புறம்போகாத கதை அம்சம். அதாவது நடைமுறை விஷயங்களைப்பற்றி எழுதுவது நல்லது.

4. இலக்கியம் என்பது உள்ளடக்க அம்சத்தில் சமூகத்துக்குத் தேவையான, நன்மை பயக்கக்கூடிய நல்ல பல அம்சங்களையே பிரதிபலிக்க வேண்டும். துவராடை புனைந்தவர்கள் எல்லாம் துறவிகளாவதில்லை. அது போல அழகிய கலாரூபம், உருவ அமைதி அமைந்து விட்டால் மட்டும் ஒரு சிருஷ்டி இலக்கியமாகி விடுவதில்லை. மக்கள் சமுதாயத்தை மறந்து எழுது கிறவனை மக்களும் மறந்து விடுவார்கள்.

5. எல்லா இலக்கியங்களும் வாசகர்கள் மனதில் ஒரு கருத்தையோ, பல கருத்துக்களையோ பதிய வைக்கவே எழுதப்படுகின்றன. அந்த வகையில் எல்லா இலக்கியங்களும் பிரசார இலக்கியம்தான். அந்தக் கருத்துக்கள் கலையழகோடு கூடிய உருவ அமைதியோடு தெரிவிக்கப்பட வேண்டியது அவசியம்தான். என்றாலும் அந்தக் கருத்து சமூகத்துக்குப் பயனளிக்கும் விதத்தில் இருக்க வேண்டியது அதைவிட அவசியமானது. அழகான உருவ அமைதியும் ஆரோக்கியமற்ற உள்ளடகமும் ஒரு இலக்கியப் படைப்பில் இடம் பெற்றிருக்கும் என்றால் அது குஷ்டரோகிக்குப் பட்டும் பீதாம்பரங்களும் போர்த்திக் கொலு அமர்த்திய கதையாகத்தான் இருக்கும்.

6. ஆசிரியன் தான் சொல்ல வந்த கருத்தைப் பச்சையாக பிறந்தமேனியாக வெளியிட்டாலும் அது இலக்கியமாகாது, அல்லது தனது கருத்தை வலியுறுததுவதற்காக செருப்புக்குத் தக்க காலைத்தறிக்கும் கதை போல், யதார்த்த உண்மைகளைத் திரித்தோ, மறைத்தோ, மறுத்தோ எழுதினாலும் அந்நூல் இலக்கியமாகாது.

7. ஒரு இலக்கிய ஆசிரியனுடைய கருத்து எந்த அளவுக்கு இலைமறை காய்மறையாக இணைந்து நிற்கிறதோ அந்த அளவுக்குத்தான் அதன் இலக்கியத் தன்மையில் மேம்படுகிறது என்பது ஒரு உண்மை. அவ்வாறு இலைமறை காய்மறையாக இணைந்து பிணைந்து நிற்கும் அக்கருத்து வலிந்து புகுத்திவிட்டது போன்று அமையாமல், அந்த நூலில் பிரதிபலிக்கப் படும் சம்பவங்கள், பாத்திரங்கள் முதலியவற்றிலிருந்தும் யதார்த்தத்துக்கு முரணற்ற வகையில் உருவாகி உரம் பெற வேண்டும் என்பது மற்றொரு உண்மை.

- தொ.மு.சி.ரகுநாதன

# சினிமா சினிமா

✹ எஸ்.ஏ.சந்திரசேகரன் இயக்கத்தில் விஜயகாந்த் நடித்த "சட்டம் ஒரு இருட்டறை" படம் ரீமேக் செய்யப்படுகிறது. நடிகர் விஜய் தயாரிக்கும் இந்தப் படத்தில் பிரபுவின் மகன் விக்ரம்பிரபு கதாநாயகனாக நடிக்கிறார். "கோ" படத்தில் இணைந்து நடித்த கார்த்திகா, பியா ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கிறார்கள்.

✹ மெரீனா படத்தை இயக்கிய பாண்டிராஜ், அடுத்து விக்ரமை வைத்து ஒரு படம் இயக்குகிறார். காதல் மற்றும் நகைச்சுவை கலந்த கதை. அதைத்தொடர்ந்து, மீண்டும் சிறுவர்களை மையமாக வைத்து, இன்னொரு படம் இயக்குகிறார் பாண்டிராஜ், அதில் சர்வதேச அளவிலான, சிறுவர்களின் பிரச்சினையை சொல்லப் போகிறாராம்.

✹ சில்க் ஸ்மிதாவின் கதையைச் சொன்ன, "த டேர்ட்டி பிக்சர்ஸ்" படத்திற்காக சிறந்த நடிகைக்கான தேசிய விருது கிடைத்த சந்தோஷத்தில் உள்ள வித்யாபாலனுக்கு, தமிழிலும் நிறைய ரசிகர்கள் கிடைத்துள்ளனர். அதனால், நேரடி தமிழ் படங்களில் நடிக்க விருப்பம் தெரிவித்திருக்கிறார். இந்தச் சேதியால், கோலிவுட் கிளாமர் குயின்கள் அதிர்ச்சியில் உள்ளனராம்.



✹ "ஏஸ் ராஜா ராணி ஜாக்கி மற்றும் ஜோக்கர்..." என்ன இது சீட்டுக்கட்டில் இருக்கும் பெயர்களாக வருகிறதே என்று நினைக்கிறீர்களா...? ஆம் தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் உருவாக இருக்கும் புதிய படத்தின் பெயர்தான் இது. பிரபல தெலுங்குப் பட நிறுவனம், 3டி படமாக இப்படத்தை தயாரிக்கிறது. ஷாம், அல்லரி நரேஷ், வைபவ், ராஜு சுந்தரம், சினேகா ஆகியோர் நடிக்க முக்கிய கதாபாத்திரத்தில் நாசர் நடிக்கிறார். அனில் சுங்கரா என்பவர் இப்படத்தை இயக்குவதுடன், தயாரிக்கவும் செய்கிறார். இவர் நியூயோர்க் திரைப்படக் கல்லூரியில் இயக்குநர் துறையில் படித்தவர்.




இந்தியாவின் முதல் வணிக ரீதியிலான 3டி படம் இது. இதற்காக அமெரிக்காவில் இருந்து ஸ்டீரியோஸ்கோபிக் உபகரணங்களும் அதனை இயக்கும் தொழில் நுட்பக்கலைஞர்களும் வரவிருக்கிறார்கள். பிரபல இசையமைப்பாளர் பப்பிலஹரியின் மகன் பப்பாலஹரி இந்தப் படத்திற்கு இசையமைக்கிறார்.

# விழிப்புறுக!

எங்கே மனம் அச்சமற்றிருக்கிறதோ,
தலை நிமிர்ந்திருக்கிறதோ
எங்கே அறிவு உரிமையுடனிருக்கிறதோ
எங்கே உலகம் குறுகிய எல்லைகளால்
துண்டு துண்டாகப் பிளவுபடாதிருக்கிறதோ
எங்கே உண்மையின் ஆழ்ந்த அடிப்படையிலிருந்து
சொற்கள் பிறக்கின்றனவோ
எங்கே சலியாத உழைப்பு,
விழுமிய நிலையை நோக்கி நீளுகிறதோ
எங்கே பகுத்தறிவு என்னும் தெளிந்த நீரோடை,
மூடப் பழக்கவழக்கம் என்னும்
வறண்ட பாலையில் சுவறிப் போகாதிருக்கிறதோ
எங்கே விரிந்து நோக்கும் எண்ணத்திலும் செயலிலும்
மனத்தை நீ முன்னின்று அழைத்துச் செல்கிறாயோ –
அங்கே, அந்த உரிமையுள்ள இன்ப உலகத்தில்,
நம் நாடும் மக்களும் விழிப்புறுக!

- ரவீந்திரநாத் தாகூர்



# வடக்கில் வாழ்வாதாரத்தை உயர்த்த அரசால் 15 பில்லியன் ரூபா செலவீடு

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் வடக்கு - கிழகக்கு மாகாணங்களின் மீள் நிர்மாண நட வடிக்கைகளுக்காக 160 பில்லியன் ரூபாவை செலவிட்டிருப்பதாக பொரு ளாதார அபிவிருத்தி அமைச்சின் மேல திக செயலாளர் நிஹால் சமரவீர தெரி வித்தார்.

இதில் வடமாகாண மக்களின் வாழ் வாதாரத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங் கம் 15 பில்லியன் ரூபாவை செலவிட்டி ருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணம் தேசிய பொரு ளாதாரத்திற்கு 6 சதவீத பங்களிப்பை இப்போது வழங்குகின்றது. இது வட மத்திய மாகாணம் மற்றும் ஊவா மாகா ணம் பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பை விடக் கூடுதலாகும். வட மாகாணம் தேசிய பொருளாதாரத்திற்கு 3 சதவீத பங்க ளிப்பை வழங்குகின்றதென்றும், அமைச் சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார். நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்க ளில் பல்வேறு அமைச்சுகள் பலதரப் பட்ட அபிவிருத்தி திட்டங்களை நடை முறைப்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

தற்போது பல குறுகிய கால திட்டங் கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், நடுத்தர அளவிலான அபிவிருத்தி திட்டங்களும் இப்போது முடிவுபெறும் நிலையை எட்டியிருக்கின்றது.

மின்சார எரிசக்திதுறை அமைச்சு, நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, போக்குவரத்து அமைச்சு ஆகியன பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நடை முறைப்படுத்தி வருகின்றன. இம் மாகா ணங்களில் நடுத்தர அளவிலான அபி விருத்தி நடவடிக்கைகள் அனைத்துமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதில் கண்ணிவெடி அகற்றுதல், மீள் குடியேற்றம், வாழ்வாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு முக்கி யத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இரண் டாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தி னரை கண்ணி வெடி அகற்றுவதற்காக பயன்படுத்தி வருகின்றது. இவற்றிற்கு மேலதிக 6 அணிகள் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

அரசாங்கம் 800 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இவ்விரு மாகாணங் களில் உள்ள 250 கிலோமீற்றர் நீளமான ரயில் பாதைகளை அபிவிருத்தி செய்வ தற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இத்துடன் வடக்கு, கிழக்கின் மின் விநி யோகத் திட்டத்திற்காக அரசாங்கம் 65 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் செலவிட்டுள்ளது.

இவ்வாண்டு இறுதிக்குள் யாழ்.குடா நாடு தேசிய மின்விநியோக வலை யமைப்பில் இணைத்து கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. அர சாங்கம் இரணைமடு நீர் விநியோகத் திட்டத்திற்கு 1064 மில்லியன் ரூபாவை யும், வட மாகாண கிராமிய அபிவிருத்தி திட்டத்திற்கு 600 மில்லியன் ரூபாவையும் செலவிட்டுள்ளது. இந்தத்திட்டங்கள் அனைத்துமே 2013 ஆம் ஆண்டில் நிறைவு பெறும் என்று பொருளாதார அபி விருத்தி அமைச்சு தெரிவித்தது.

## 7500 ரூபா போதும் நிரூபிக்கவும் தயார்

(கொழும்பு)

மூன்று பேர் கொண்ட குடும்ப மொன்று 7500 ரூபாவுடன் வாழ்க்கை நடத்த முடியும் என்பதை நிரூபிப்பதற் காக பகிரங்க விவாதத்திற்கு, தான் தயார் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

இதற்காக சிறந்த பொருளாதார அறிவு கொண்ட எந்த நபரையும் விவாதத்தில் எதிர்கொள்ளத் தயார் என அவர் கூறினார்.

பொருளியல் ஆசிரியராக பணியாற் றிய அமைச்சர் பந்துல குணவர்தன இது தொடர்பாக மேலும் கூறுகையில், ஒரு குடும்பம் மாதாந்த வருமானத்தின் 41 சதவீதத்தை மாத்திரம் உணவுக்காக செலவிடுவதாகவும் ஏனையவற்றை ஆடைகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துவதற்கு பயன்படுத்துவதாக வும் அவர் கூறினார்.

## பிரதமர் கூறியதைக் கேட்டால் வாக்குகள் குறைந்திருக்குமாம்

(கொழும்பு)

பிரதமர் டி.எம். ஜயரட்ன அண்மையில் வெளியிட்டிருந்த கருத்தை உலக நாடு கள் கேள்விபட்டிருந்தால் ஐக்கிய நாடு கள் மனித உரிமைப் பேரவை அமர்வு களில் இன்னும் குறைந்தளவு வாக்கு களே இலங்கைக்கு கிடைத்திருக்கும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறி யும் ஆணைக்குழு அறிக் கைப் பரிந்துரைகள் தொடர்பில் பிரதமர் கருத்து வெளியிட்டி ருந்தார்.

ஆணைக்குழு அறிக் கையை அமுல்படுத்து வதற்கு முன்னர் புத்தி ஜீவிகளின் ஆலோசனை பெற்றுக்கொள்ள ப்பட உள்ள தாக பிரதமர் தெரிவித்திருந் தார்.



அரசாங்கத் தின் இந்த இரட்டை நிலைப்பாட்டை உலக நாடுகள் தெரிந்து கொணடிருந் தால் இலங்கைக்கு மிகக் குறைந்தள வான வாக்குகளே கிடைத்திருக்கும்.

பிரதமரின் இந்தக் கருத்து இலங் கைக்கு ஆதரவாக வாக்களித்த நாடு களை அவமரியாதை செய்யும் வகை யில் அமைந்துள்ளது.

பிரச்சினைகளுக்கு உரிய முறையில் தீர்வு காணப்படாவிட்டால் எதிர்காலத் தில் பாரியளவிலான சர்வதேச அழுத் தங்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## அறுபது வீதமானவர்கள் உயர் கல்வி பெறத் தகுதி



(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தர பரீட் சைக்குத் தோற்றிய 2 70 314 பாடசாலைப் பரீட்சார்த்திகளில் 1 64 191 பேர் உயர்தரம் கற் பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

3908 மாணவர்கள் தோற்றிய 9 பாடங்களிலும் 'ஏ' தரத்தில் சித்தியடைந்துள்ளனர்.

12795 மாணவர்கள் 9 பாடங் களிலும் சித்தியடையவில்லை ('எவ்' பெற்றுள்ளனர்) என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு அகில இலங்கை ரீதியில் சிறப்புச் சித்தி பெற்ற முதல் 10 மாணவர்களின் பெயர் கள் வெளியிடுவதற்கான செய் தியாளர் மாநாடு நேற்றுமுன் தினம் கல்வி அமைச்சில் நடை பெற்றபோதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித் தார்.

அகில இலங்கை ரீதியில் திறமை சித்திபெற்று முதல் 10 பேரின் பெயர்களும் வெளி யிடப்பட்டன. இதில் முதல் 10 இடங்களுக்கும் கொழும்பு, மாத்தறை, கண்டி, ரமபுக்கன உட்பட 13 மாணவ மாணவிக ளின் பெயர்கள் வெளி யிடப்பட்டுள்ளன. இதில் டொப் டென் முதற் பத்துப்பேரின் பெயரப் பட்டியலில் எந்தவொரு தமிழ் மொழி மூல மாணவனோ மாண வியோ தெரிவாகவில்லை என் றும் அமைச்சர் பந்துல தெரி வித்தார்.

சகல பாடங்களிலும் 'ஏ' சிதத்தி பெற்றவர்கள் மேல் மாகாணத்தி லேயே உள்ளனர். இங்கு 2001 மாணவர்கள் சித்திபெற்றுள்ள னர். அதேபோன்று சகல பாடங் களிலும் ஆகக் கூடுதலாக 'எவ்' பெற்று சித்தியடையா தவர்களும் மேல் மாகாணத்தி லேயே பதிவாகியுள்ளது. இங்கு 2 692 பேர் 'எவ்' பெற்றுள்ளனர்.

வடக்கு கிழக்கில் ஆகக் குறைவான மாணவர்களே சகல பாடங்களிலும் 'எவ' பெற்றுள்ள னர். வடக்கில் 64 மாணவர்க ளும் கிழக்கில் 792 மாணவர்க ளும் சித்தியடையவில்லை.

இம்முறை வெளியாகியுள்ள க.பொ.த சாதாரண தர பெறு பேறுகளுடன் கடந்த வருட பெறுபேறுகளை ஒப்பிடுகை யில் சகல பாடங்களிலு 'ஏ' சித்தி பெற்றவர்கள் 2010 ஆம் ஆண்டு 3057 மாணவர்கள், 2011 இல் 3908 மாணவர்கள் - சகல பாடங்களிலும் 'எவ்' புள்ளி பெற்று சித்தியடையாதவர்கள் 2010 ஆம் ஆண்டு 14 411 மாண வர்கள், 2011 ஆம் ஆண்டு 12795 மாணவர்கள் எனவும் பதிவாகியுள்ளது என பரீட்சை ஆணையாளர் டபிள்யூ எம். என்.ஜே.புஷ்பகுமார தெரிவித் தார்.

அகில இலங்கை ரீதியில் இம் முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 463 பேரின் பரீட்சைப் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிளில் பற்றிய தீ இளைஞனின் உயிரைக் குடித்தது

(கொழும்பு)




நீர்கொழும்பு - கல்கந்த சந்தி யில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தின் போது, மோட்டார் சைக்கி ளொன்று தீப்பிடித்து எரிந்ததன் காரணமாக இளைஞர் ஒருவர் தீயில் கருகி மரணமடைந்தார்.

வீதியில் பயணித்துக்கொண்டி ருந்த லொறியொன்றுடன் மோட் டார் சைககிள் மோதியதாகவும் இதன்போது மோட்டார் சைக் கிள் தீப்பிடித்ததன் காரணமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் தீயில் மரணமடைந்த தாகவும் நீர்கொழும்பு பொலி ஸார் தெரிவித்தனர்.

இதன்போது மோட்டார் சைக் கிள் முற்றாகத் தீப்பிடித்து எரிந்து நூசமாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





கிழக்கு மாகாண பல்கலைக்கழகத்தின் முதலாவது மருத்துவக் கண்காட்சியை நேற்று முன்தினம் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆரம்பித்து வைத்தார். இன்றுவரை இடம்பெறும் இக்கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்ட மனித உடல் தொகுதியைக் காணலாம்.

5) ரவியின் நிறையை விட பார்வதியின் நிறை எவ்வளவு அதிகம்?

..........................................................................................

6) நிறைப்படி ஏறுவரிசைப்படுத்தினால் கடைசியில் நிற்பவரின் பெயரை எழுதுக.

..........................................................................................

7) 2006.10.01 அன்று 20 வயதைப் பூர்த்தி செய்யும் பிள்ளையின் பெயரை எழுதுக.

..........................................................................................

8) 2006.10.01 அன்று ரோஸின் வயதை எழுதுக.

..........................................................................................


**7) பின்வருவனவற்றின் விடையை எழுதுக.**

1) 15 லீற்றர் 400 மில்லி லீற்றர் கொண்ட பாலை சமனான இரண்டு பாத்திரத்தில் ஊற்றினால் ஒரு பாத்திரத்தில் உள்ள அளவு?

..........................................................................................

2) 8 மீற்றர் துண்டுகள் 8 வெட்டிய பின்னர் 225 மீற்றர் துணியில் மிகுதி எவ்வளவு?

..........................................................................................


3) 

சரியான நேரத்தைவிட 45 நிமிடம் குறைவாக இக்கடிகாரம் காட்டுகின்றதெனில் உண்மையான நேரத்தை எழுதுக.

..........................................................................................

4) பாடசாலை ஒன்று 16.20 மணிக்குத்தான் விடும் எனில் இந்நேரத்தை சாதாரண நேரத்தில் எழுதிக் காட்டவும்?

..........................................................................................

5) 


1) இச்சதுரக் கூடு ஒன்றின் பரப்பளவு ஒரு சதுர சென்ரி மீற்றர் எனில், இங்கு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு யாது?

..........................................................................................

2) இச்சதுரக் கூட்டின் சுற்றளவு யாது?

..........................................................................................

**8)** பாடசாலை விடுமுறை ஆரம்பமாகிவிட்டது. நான் நண்பர்களுடன் மிகவும் மகிழ்ச்சியோடு மைதானத்திற்குச் சென்று விளையாடினேன். திடீரென எனது சட்டையின் பின்பக்கம் கிழிந்துவிட்டது என்பதைத் தொடர்ந்து 6 வசனங்கள் எழுதுக.

## கடந்த புதன்கிழமை வெளியான வெளியீடு - 46 கேள்விகளின் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) அ - D, ஆ - C | 9) 2 | 15) கிலோமீற்றர் | 23) 3 | 31) 2/16 | 39) தையற்காரன் |
| 2) அ - B, ஆ - A | 10) 1 | 16) மீற்றர் கோல் | 24) 2 | 32) 9 3/16 | 40) சுதந்திரம் |
| 3) அ - D, ஆ - C | 11) ◎ ⊗ ○ | 17) அளவுநாடா | 25) 3 | 33) 6 | |
| 4) அ - B, ஆ - A | | 18) லீற்றர் | 26) 1 | 34) 1 | |
| 5) 3 | 12) ⊙ ⓪ ⦿ | 19) அடிமட்டம் | 27) 2 | 35) 2 | |
| 6) 2 | | 20) 3 | 28) 2 | 36) பேராசை | |
| 7) 3 | 13 ○ ⓪ | 21) 2 | 29) 2 | 37) ஏற்றினான் | |
| 8) 4 | 14) மேடைத் தராசு | 22) 2 | 30) 1 | 38) அனுபவம் | |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 47



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**1) பின்வரும் பந்தியை வாசித்து விடை எழுதுக.**

ஒருநாள் நரி ஒன்று உணவு தேடி காட்டில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கும் போது கால் தவறி பாழும் கிணறொன்றில் விழுந்துவிட்டது. எவ்வளவு முயன்றும் அதனால் கிணற்றில் இருந்து வெளியேற முடியவில்லை. எனவே சற்று நேரம் அக்கிணற்றினுள் அமைதியாக இருந்தது. சிறிது நேரத்தில் அவ்வழியாகச் சென்ற முயல், நரி ஒன்று கிணற்றினுள் இருப்பதைக் கண்டு இது ஏதோ தந்திரத்தில் ஒழிந்து கொண்டிருப்பதாக நினைத்து வேகமாகச் சென்றுவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் அந்தப் பக்கமாக வந்த ஆடொன்று நரியைக் கண்டு ஏனப்பா இதற்குள் அமர்ந்திருக்கிறாய்? என அன்பாகக் கேட்டது. அதற்கு அந்த நரி இக்கிணற்று நீர் மிகச் சுவையாக உள்ளது. குடிக்க குடிக்க சுவையாக உள்ளது என்றது. ஆடும் எதையும் சிந்திக்காமல் அக்கிணற்றினுள் குதித்தது.

1) இப்பந்தியின்படி வேண்டுமென்றே துன்பத்தில் விழுந்தது யார்?

..........................................................................................

2) என்ன செய்து கொண்டிருக்கும்போது நரி கிணற்றினுள் விழுந்தது?

..........................................................................................

3) இங்கு குறிக்கப்பட்டுள்ள விலங்குகளில் தந்திரமுள்ள விலங்கு எது?

..........................................................................................

4) முயல் எவற்றை உணவாகக் கொள்ளும்?

..........................................................................................

5) ஆடு ஏன் கிணற்றினுள் குதித்தது?

..........................................................................................

6) பின்வரும் சொற்களை எதிர்காலத்தில் எழுதுக.

1) விட்டது.................................... 2) கண்டு....................................

7) ஆடுகள் கிணற்றில் குதித்தன என்பதை ஒருமையாக மாற்றி எழுதுக.

..........................................................................................

8) நரி உணவு தேடியது என்பதைப் பன்மையாக மாற்றி எழுதுக.

..........................................................................................

9) பின்வருவனவற்றுக்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் எழுதுக.

1) மறைத்து.................................... 2) சிறிது....................................

10) இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களை இட்டு வசனத்தைப் பூரணப்படுத்துக.

ஆட்டின் முதுகின் மீது ஏறிய......................................................வந்தது

11) ஆட்டின் செயலைக் குறிக்கும் பழமொழி ஒன்றை எழுதுக.

..........................................................................................

**2) பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள சொற்களை அமைக்க.**

1) o, k, o, s, b, ..............................

2) m, a, t, s, p, s, ..............................

3) a, g, n, m, o, ..............................

4) று, மு, க, ஆ, ம், ..............................

5) லை, தி, கோ, ம, ண, ரு, ..............................

6) ணா, ச, ல, ர, ம், ய, ..............................

7) ச், வீ, வெ, ச, டு, ளி, ..............................

8) ரோ, ரி, ப, ப, கா, ..............................

**3) பின்வரும் ஒவ்வொன்றுக்கும் தனி ஒரு சொல் எழுதுக.**

1) ஒருவர் பிறந்த நாடு ..............................

2) பெண் குரங்கு..............................

3) நீரிலும் நிலத்திலும் வாழ்தல் ..............................

4) தலை இல்லாத உடல்..............................

5) யானையின் மலம்..............................

**4) பின்வருவனவற்றின் கருத்தை எழுதுக.**

1) தான்தோன்றி..............................

2) வயிற்றிலடித்தல்..............................

3) பித்தலாட்டம்..............................

4) கருதுகோள்..............................

**5) மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**


1) 

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தலைக்குரியது?

1) ஒரு ஆடு 2) ஒரு மாடு 3) ஒரு முயல்


2) ........................ மூக்கு போன்றது என்பர். இங்கு இடைவெளியில் வரவேண்டியது.

1) கொக்கின் 2) சிட்டுக் குருவியின் 3) கிளியின்

3) 


இப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதத்துக்குரியது?

1) ஒரு யானை 2) ஒரு மாடு 3) ஒரு ஒட்டகம்

4) 


இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தலைக்குரியது?

1) ஒரு கொக்கு 2) ஒரு காகம் 3) ஒரு பருந்து

5) 

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கோள்


1) புதன் 2) சனி 3) வெள்ளி

6) 

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சந்திரனைக் காணும் இரவு?


1) பௌர்ணமி 2) அமாவாசை 3) அமாவாசைக்குப் பின்



7) 

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள தாவரம்?

1) கரும்பு 2) மூங்கில் 3) நெல்

8) 


இப்பூவில் எத்தனை இதழ்கள் உள்ளன?

1) ஐந்து 2) இரண்டு 3) ஒன்று

9) 

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள இலையானது,

1) வெண்டிக்காய் மரத்தினது 2) மரவள்ளி மரத்தினது 3) கத்தரி மரத்தினது

10) 

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள கிணறு

1) ஆழக்கிணறு 2) துலாக்கிணறு 3) பாழுங்கிணறு

11) இவ்வாறான கிணறுகள் காணப்படும் பிரதேசம்?

1) கரையோரம் 2) மத்திய மலைநாடு 3) ஆற்றோரம்

12) மேலே உள்ள கிணற்றின் செயற்பாட்டை பின்வரும் எதனுடன் ஒப்பிடலாம்?

1) சில்லு 2) இயந்திரம் 3) நெம்புகோல்

13) 

இப்படத்தின்படி இப்பிள்ளையின் நிலை,

1) நிமிர்ந்த

2) சீரான

3) கவனமான

14) பின்வருவனவற்றுள் சுவட்டு நிகழ்ச்சி எது?

1) நாட்டுக்குக் குறுக்கா ஓடுதல் 2) உயரம் பாய்தல் 3) 100 மீற்றர் ஓட்டம்

15) நாயின் வாலை இலகுவில்

1) நிமிர்த்த முடியாது 2) நிமிர்த்தவே முடியாது 3) நிமிர்த்தலாம்

**6) சில பிள்ளைகளின் விபரங்களை இவ்வட்டவணை காட்டுகின்றது. அதனுதவியுடன் வினாக்களுக்கு விடைதருக.**

| பெயர் | பிறந்த திகதி | உயரம் | நிறை |
|---|---|---|---|
| ரவி | 1985.08.24 | 104cm | 32kg |
| சுமதி | 1985.09.02 | 110cm | 30kg |
| பார்வதி | 1986.01.10 | 90cm | 48kg |
| நசார் | 1986.10.01 | 1m 15cm | 32kg |
| பேபி | 1986.04.08 | 1m 18cm | 27kg |
| ரோஸ் | 1987.12.31 | 85cm | 23kg |

1) வயதில் மிகக் குறைந்த பிள்ளையின் பெயர் என்ன?

..............................

2) வயது கூடிய பிள்ளையின் பெயர் என்ன?

..............................

3) பேபியின் உயரத்தை cm இல் தருக.

..............................

4) 48 kg நிறை உள்ள பிள்ளையின் உயரம் யாது?

..............................

# புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் மக்களின் நலன்கருதி விசேட போக்குவரத்துச் சேவைகளை நடத்துவற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏப்ரல் நான்காம் திகதி முதல் விசேட பஸ் சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரோஷான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாடசாலை விடுமுறையில் தமது சொந்த இடங்களுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் பெற்றோரின் வசதி கருதி ஏப்ரல் மாதம் நான்காம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் சொந்த இடங்களுக்குச் சென்று மீண்டும், கொழும்புக்குத் திரும்பும் மக்களுக்காகவும் விசேட பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வெளிஇடங்களில் இருந்து கொழும்புக்குத் திரும்பும் மக்களுக்கான பஸ் சேவைகள் ஏப்ரல் 15 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலின் கவனம்....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைப்பாட்டையும் புதிய பார்வையையும் அது கொண்டிருக்காமையே.

யாழ்ப்பாணத்தில் சில ஊடகவியலாளர்கள் சில கேள்விகளை ரணிலிடம் எழுப்பினார்கள். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறை குறித்தும், போர்க்குற்ற விவகாரங்களைக் குறித்தும், மக்களுடைய வாழ்க்கையைக் குறித்தும் அந்தக் கேள்விகள் இருந்தன.

இவை எவற்றுக்குமே அவர் பதிலளிக்கவில்லை.

அவருடைய கவனங்கள் நீதியைக் குறித்ததோ அமைதியைக் குறித்ததோ மக்களுடைய நல்வாழ்வைக் குறித்ததோ இல்லை என்பதற்கு அவருடைய பதிலின்மை தெளிவூட்டுகிறது. பதிலாக மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்கானதே.

இப்போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்தின் மீதான அதிருப்தியையும் போர்க்குற்றங்களின் அலை, தமிழ் மக்களிடம் உண்டாக்கிய மனநிலையையும் தனக்கான அறுவடையாக்கும் முயற்சியில், இந்தச் சற்றேனும் மனந்தளராத (ரணில்) விக்கிரம(ாதித்தன்) சிங்க இறங்கியுள்ளார்.

வரலாறு ஒரு சக்கரம்தான். அதேவேளை அது மக்களின் மறதியினூடாகவும் அவர்களுடைய மூடத்தனங்களுக்கூடாகவும் திரும்பத்திரும்ப அதிகாரத்தை பொருத்தமற்றவர்களின் கைகளிற் கொடுத்துவிடுகிறது.

# இந்தியப் பொருட்களை பகிஷ்கரித்தால் புத்தர் சிலைகளையும் அகற்ற வேண்டும்

## கூறுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

இந்தியப் பொருட்களை பகிஷ்கரிப்போமானால் முதலில் இங்குள்ள புத்தர் சிலைகளை அப்புறப்படுத்த வேண்டிவரும். ஏனெனில், புத்த தர்மம் எமக்கு இந்தியாவிலிருந்தே வந்ததென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அரசாங்கம் வெளிநாட்டுக் கொள்கையை கையாள்வதில் தோல்வி கண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காடடினார்.

ஐ.நா. எமக்கெதிராக நிபுணர் குழு அமைக்காது. அமெரிக்கா ஜெனிவாவில், பிரேரணை கொண்டு வராது என வெளிநாட்டமைச்சர் ஜீ. எல். பீரிஸ் உறுதிமொழிகளை வழங்கினார்.

ஆனால், இவையனைத்தும் நடைபெற்று முடிந்துவிட்டது. அரசாங்கத்திற்கு இராஜதந்திர ரீதியான எதிர்காலத் திட்டம் கிடையாது. இதுவே இன்றைய நிலைமைக்கு காரணமாகும். இது நாட்டுக்கு எதிரான பிரச்சினையல்ல. அரசாங்கத்தின் பிழையான செயற்பாடுகளால் அரசுக்கு எதிராகவே இப்பிரச்சினை எழுந்துள்ளது.

எனவே, அரசாங்கமே இதற்குத் தீர்வு காணவேண்டும் ஆனால் அரசாங்கத்திடம் இராஜதந்திரம் கிடையாது. சுதந்திரம் கிடைத்தது தொடக்கம் இந்தியாவுடன் நட்புறவை பேணி வந்துள்ளோம். அந்நாட்டின் உதவி எமக்கு அவசியம் தேவையாகும் ஆனால் இன்றைய அரசாங்கத்தால் இந்தியாவின் நட்புறவை பெற முடியவில்லை. இது எமது வெளி விவகாரக் கொள்கையின் தோல்வியையே வெளிப்படுத்துகிறது.

இவ்வாறானதோர் தருணத்தில் அமெரிக்கா, இந்தியப் பொருட்களை பகிஷ்கரிக்குமாறும் இந்நாடுகளுக்கு எதிரான மன நிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துமாறும் சில அமைச்சர்கள் கூறுகின்றார்கள்.

இவ்வாறு நாம் இந்தியப் பொருட்களை பகிஷ்கரிக்கும் பட்சத்தில் முதலில் புத்தர் சிலைகளையும் அப்புறப்படுத்த வேணடிவரும். ஏனென்றால் புத்த தர்மம் இந்தியாவிலிருந்தே எமக்கு கிடைத்தது. எனவே அரசாங்கத்தின் இருப்புக்காக மக்களை ஏமாற்றுவதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்வது கைவிடப்பட வேண்டும். ஆட்சியதிகாரத்தை பற்றி நினைக்காது நாட்டைப் பற்றி சிந்தித்து இந்தியாவுடன் நட்புறவை வளர்கக வேண்டும் என கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார்.

## பிள்ளைகளை நல்வழிப்படுத்துங்கள்...



இயேசு கடவுளைத் தம் தந்தை என அழைத்தார். தந்தை-மகன் உறவை நாம் பெற்றோர்-பிள்ளை உறவாகப் புரிந்துகொள்கின்றோம்.

ஆனால் இயேசு கடவுள்ளத் தம் தந்தை என அழைப்பது மனித உறவுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இயேசு கடவுளின் மகன் என்னும் முறையில் காலத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் தந்தையிடமிருந்து புறப்படுகின்றார். இயேசு கடவுளைச் சார்ந்து இருக்கின்றார் எனவும் கடவுளுக்கு நிகராக உள்ளார் எனவும் நாம் நம்புகின்றோம்.

தற்போது நமது சமூகத்தில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே புரிந்துணர்வு இன்றி, பல்வேறுபட்ட கருத்து வேறுபாடுகளால் சண்டை, சச்சரவுகள். பெற்றோரைப் பிள்ளைகள் இழிவுபடுத்துகின்ற செயல்கள், புண்படுத்துகின்ற நிலைகள் தற்போது எங்கும் காணக்கூடியதாக இருக்கின்றன.

இயேசுவின் சொல், செயல், பணி எல்லாமே தந்தையை நமக்கு அறிவிக்கின்ற விதத்தில் அமைகின்றன. இயேசுவைக் காண்போர் தந்தையைக் காணும் விதத்திலேயே இயேசு நடந்துகொண்டார்.

எனவே பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நல்ல பிள்ளைகளாக வாழ பிள்ளைகள் முயலவேண்டும். அவ்வாறே பிள்ளைகளைப் புரிந்துகொண்டு அவர்களில் அக்கறையுள்ளவர்களாக பொறுப்போடு வளர்க்கவேண்டியது பெற்றோரின் நற்கடமையாக இருக்கின்றது. இத்தவக்காலத்தில் பிள்ளைகளுக்கு சமயம் சார்ந்த பல நற்செயல்களையும், இறைவனோடு எமக்குள்ள தொடர்பை பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்த முற்படுவோம்...

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பிரதான நிகழ்வு கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

வட மாகாணத்திற்கான தமிழ் சிங்கள புதுவருட பிரதான வைபவம் நாளை மறுதினம் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

தேசிய மொழி, சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு, வட மாகாண சபை, கிளிநொச்சி மாவட்ட செயலகம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வை கிளிநொச்சி மததிய மகா வித்தியாலய மைதானத்தில் ஏற்பாடு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவிததார்.

இதேவேளை, ஜனாதிபதியின் பொதுமக்கள் தொடர்பு பிரிவும், வட மாகாண சபையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள புத்தாண்டு வைபவம் எதிர்வரும் 6 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடாத்தப்படவுள்ளது. நாளைமறுதினம் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள புத்தாண்டு நிகழ்வு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்கள் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள பிரதான புத்தாண்டு வைபவத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

புத்தாண்டை முன்னிட்டு பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பல்வேறு போட்டிகளும் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், எல்லே போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பமாகும் சைக்கிள் ஓட்டப்போட்டி பளையில் முடிவடையவுள்ளது. இந்த திறந்த போட்டிகளில் வட மாகாணததைச் சேர்ந்த சகலரும் கலந்து கொள்ள முடியும்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் பாரம்பரிய போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. முதல் தடவையாக மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தவுள்ள இந்தப் புத்தாண்டு கொண்டாட்டத்தை சிறப்பாக நடத்தி முடிக்க தனியார் துறையினர் பலர் அனுசரணை வழங்கி வருவதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# சைவமும் தமிழும் தழைத்தோங்க தம்மையே அர்ப்பணித்தவர்

**நல்லைக் குருமணியின்**

**நல்லை ஆதீன ஸ்தாபகர் (31 ஆம் ஆண்டு) குருபூசைதினம் இன்றாகும். அதனையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகின்றது.**

சைவமும் தமிழும் தழைத்தோங்குவதற்குத் தம்மையே அர்ப்பணித்து முற்று முழுதாகச் சேவையிலீடுபட்டு அயராது உழைத்தவர் நல்லைக் குருமணி அவர்கள். 1966 ஆம் ஆண்டு நல்லையம் பதியிலே திருஞானசம்பந்தர் ஆதீனம் என ஓர் ஆதீனத்தைத் தாபித்து அரிய சேவை செய்தவர் ஸ்வாமிகளே!

கதாப்பிரசங்கம் மூலமாக சைவசமய தத்துவங்களையும் அடியார்கள், நாயன்மார்கள் முதலானோரின் புராண வரலாறுகளையும் விளக்கமாக விவரித்துக் கூறும் ஆற்றல் படைத்த இவர், இலங்கையில் பல இடங்களில் கதை செய்திருக்கின்றார்.

தொண்டையினாலேயே தொண்டாற்றிய இவர், இந்தத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை நிறுவியதோடு மட்டுமல்லாமல், பண்ணிசை வகுப்புக்கள், சங்கீத இசை விழாக்கள், பாலர் வகுப்புக்கள் ஆகியவைகளை நடத்தித் தமது சேவையை விரிவுபடுத்திக் கொண்டார்.

இந்தியாவிலே இருக்கின்ற ஆதீனங்கள் போல இலங்கையிலும் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்ட இவர், மதுரை ஆதீனம் சென்று காஷாயம் பெற்றுத் துறவு பூண்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் என்னும் பெயரோடு இலங்கைக்கு வந்து நல்லூரிலே இந்த ஆதீனத்தை அமைத்தார்.

இலங்கையில் இவரது கதாப்பிரசங்கம் நடைபெறாத ஆலயங்களே இல்லையெனுமளவுக்குப் பல பாகங்களிலும் சென்று சைவம் வளரத் தம்மாலான மட்டும் அளப்பரிய சேவை செய்திருக்கின்றார் என்றால் அது மிகையாகாது.

இவரது தோற்றம், நல்லூரில் தோன்றியவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்றே காணப்பட்டது. இவருடைய கடுமை யான சேவையின் பிரதிபலிப்பே நாங்கள் இன்று நெற்றியிலே திருநீறு தரித்துச் சைவர்கள் என்ற பெருமையோடு வாழ்கின் றோம் எனில் சாலப்பொருந்தும். இன்று நடைபெறுகின்ற அவரின் 31 ஆவது ஆண்டு நினைவுக் குருபூசை நல்லை ஆதீனத்திலே குருமூர்த்த ஆலயத்திலே சிறப்புற நிகழ சைவ மக்கள் ஒவ்வொருவரும் அதில் பங்கு பற்றிச் சிவசிந்தனையுடன் வாழ நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.

சிவநெறிக் கலாநிதி
கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.





இந்தியாவின் வாழும் கலை நிலையத்தினால் புனர்வாழ்வு பெற்று விடுதலையான முன்னாள் போராளிகளுக்கான தியானப்பயிற்சி வகுப்பு வவுனியா - வைரவபுளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. 24 பேர் கலந்து கொண்ட இந்தப் பயிற்சியினை தென்னிந்தியாவைச் சேர்ந்த ஆர்.சிறிராம் சுவாமிகள் வழங்கினார்.

# இராமர் பாலத்தை தேசிய சின்னமாக அறிவிக்கக் கோருகிறார் ஜெயலலிதா



(சென்னை)

இராமர் பாலத்தை உடனடியாக தேசிய சின்னமாக அறிவிக்குமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்திய மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் மன்னாருக்கும் இடையிலான கடற்பரப்பிலுள்ள இராமர் பாலம் என அழைக்கப்படும் மணற்திட்டுக்கள் தேசிய சின்னமாக அறிவிக்கப்பட வேண்டும் என முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடற்பகுதியை தேசிய சின்னமாக அறிவிப்பது தொடர்பில் இந்திய மத்திய அரசு தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என இந்திய உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இராமர் பாலம் என்று அழைக்கப்படும் பகுதியில் சேது சமுத்திரத் திட்டத்திற்காக கடலை அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்படக்கூடாது என கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் பல தொடரப்பட்டுள்ளதையும் அவர் இந்தியப் பிரத மரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இதேவேளை இராமர் பாலத்திற்கு சேதம் ஏற்படாது தனுஷ்கோடி வழியாக சேதுசமுத்திரத் திட்டத்தை முன்னெடுக்கக் கூடிய சாத்தியம் குறித்து ஆராய்வதற்காக இந்திய பிரதமர் நியமித்த நிபுணர குழுவிடம தமிழக அரசு தமது நிலைபாட்டினை கையளிக்கவுள்ளது.

இந்திய - இலங்கைக்கு இடையிலான கடற்பரப்பை அகலப் படுத்தி கப்பல்கள் செல்ல வழியேற்படுத்தினால் வங்கக்கடலுக்குச் செல்ல வேண்டிய கப்பல்கள் இலங்கையை சுற்றிச் செல்ல வேண்டிய அவசியம் கிடையாது என சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீடு அதிகரிக்கும்

## அமைச்சர் அந்தோனி உறுதி


(புதுடில்லி)

பாதுகாப்புத் துறைக்கான செலவினம் அதிகரிக்கப்படுமென பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்தார். எந்த அச்சுறுத்தலையும் முறியடிக்கும்வகையில் நவீன தொழில்நுட்பங்களையும், கருவிகளையும் பெறவேண்டியது பாதுகாப்புப் படைகளுக்கு அவசியமாகியுள்ளது என அந்தோனி தெரிவித்தார்.

அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் 8 முதல 10 சதவீதம் வரை உயரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், பாதுகாப்புத் துறைக்கான செலவினத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமீபகாலமாக இந்தியாவின் பாதுகாப்பு செலவினம் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 2 சதவீதமாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

# இலங்கைக்கு கடத்தவிருந்த பீடிப் பண்டல்கள் சிக்கின



(ராமேஸ்வரம்)

ராமேஸ்வரம் வந்த பேருந்தில் கடத்தி வரப்பட்ட பீடிப் பண்டல்களை பொலிஸார் கைப்பற்றினர. திருநெல்வேலியில் இருந்து நேற்று முன்தினம் மதியம் ராமேஸ்வரம் வந்த பேருந்தில் மர்ம நபரால் கொண்டு வரப்பட்ட 10 ஆயிரம் ரூபா மதிப்புள்ள பீடி பண்டல்களை பொலிஸார் கைப்பற்றினர். இவற்றைக் கொண்டு வந்தவர் 45 வயது மதிக்கத்தக்கவர். வெள்ளை வேட்டி, சட்டை அணிந்திருந்தார். மண்டபம் வரை பேருந்தில் வந்ததாகவும், அதன்பின் அவரை காணவில்லை என நடத்துநர் தெரிவித்தார். இவற்றை இலங்கைக்கு கடத்துவதற்காக கடத்தி கொண்டு வந்திருக்கலாம் என தெரிவித்த பொலிஸார், மர்ம நபரைத் தேடிவருகின்றனர்.

# முதல்வர் கொலைக் கைதியின் தூக்குத்தண்டனை ஒத்திவைப்பு



(சண்டிகர்)

பஞ்சாப் முன்னாள் முதல்வர் பியாந்த் சிங் கொலை வழக்கில் கைதியாகவுள்ள பல்வானி சிங் ரஜோனாவை தூக்கில் இடுவதை மத்திய அரசு நிறுத்தி வைத் துள்ளது.

பியாந்த் சிங் கொலை வழக்கில், பல்வந்த் சிங் ரஜோனாவுக்கு தூக்கு தண்டனை விதிக்கப் பட்டுள்ளது. இந்தத் தண்டனையை நாளை நிறைவேற்றும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது. அவருக்கு கருணை காட்டும்படியும், தண்டனையைக் குறைக்கும் படியும் வலியுறுத்தி பஞ்சாபில நேற்று முன்தினம் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம நடத்தப்பட்டது. அடையாள வேலைநிறுத்தம் காரணமாக, பாடசாலை, கல்லூரிக்ள் மூடப்பட்டன. நேற்று முன்தினம் நடைபெற இருந்த தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்நிலையில், ரஜோன்ாவுக்கு கருணைண் காட்டும்ப்டி மத்திய அரசுக்கு சீக்கிய மத அமைப்பு அவசர கருணை மனு அனுப்பியது. பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதலும் ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து கருணை மனு வழங்கினார். இதைத் தொடர்ந்து, ரஜோனாவின் தூக்கு தண்டனையை நிறுத்தி வைக்கும்படி மத்திய அரசு நேற்று மாலை உத்தரவிட்டது. இந்த கருணை மனுக்களை ஜனாதிபதி பரிசீலித்து முடிவு எடுக்கும் வரையில், ரஜோனாவின் தூக்கு தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும்.

# பாகிஸ்தானுக்கு மின்சாரம் வழங்குகிறது இந்தியா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு 5 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் வழங்க இந்தியா முடிவுசெய்துள்ளது. சியோலில் நடைபெற்ற அணு சக்தி உச்சிமாநாட்டில் இந்திய பிரதமர் மன்மோகன் சிங் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானியிடம் இதைத் தெரிவித்ததாக பாகிஸ்தான் ஊடகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பாகிஸ்தானின் அவசரத் தேவைக்கு இந்த மின்சாரம் உதவும் என்றும் பஞ்சாப் மாநிலம் வழியாக எந்த தாமதமும் இன்றி மின்சாரத்தை வழங்க இந்தியா முடிவுசெய்திருப்பதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதில் மனமோகன் சிங் ஆர்வம் காட்டியதாகவும், அதற்கு கிலானி நன்றி தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




நேற்றைய தினம் புதுடில்லியில் ஆரம்பமான பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க வருகை தந்த டில்மாரஷூப் (பிரேசில் ஜனாதிபதி), டிமிட்ரி மிட்டதேவ் (ரஷ்ய ஜனாதிபதி), ஹூ ஜிண்டோ (சீன ஜனாதிபதி), ஜேக்கப் ஷூமா (தென் ஆபிரிக்க ஜனாதிபதி), ஆகியோருடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நிற்பதனைக் காணலாம்.

# உதயகுமார் வீட்டில் அதிகாரிகள் சோதனை

(நாகர்கோவில்)


நாகர்கோவில் கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டக் குழுவைச் சேர்ந்த உதயகுமாருக்குச் சொந்தமான நாகர்கோவில் அருகில் உள்ள வீட்டில் மத்திய அரசு அதிகாரிகள் மாநில அரசு அமைப்பு அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். உதயகுமார் வீடு, உதயகுமார் வைத்து நடத்தும் அறக்கட்டளை அலுவலகம் ஆகியவற்றில் இந்தச் சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

தொண்டு நிறுவனங்களிடம் இருந்து முறைகேடாக நிதி பெற்று அது போராட்டத்துக்கு பயன்படுத்தப் பட்டது குறித்து உதயகுமார் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்நிலையில், அவரது வீட்டில் மத்திய அரசு அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுள்ளமை இடிந்தகரை, கூடங்குளம் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

# 29ஆவது தடவையாகவும் பிரமோஸ் ஏவுகணை சோதனை

(பாலாசூர்)

ஒலியை விட அதிக வேகத்தில் செல்லக்கூடிய பிரமோஸ் ஏவுகணை நேற்று முன்தினம் ஒரிசாவின் பாலாசூர் கடற்கரை பகுதியில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது. இந்திய-ரஷ்ய தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட பிரமோஸ் ஏவுகணை, 290 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று இலக்கைத் தாக்க வல்லது. 200 முதல் 300 கிலோ எடை கொண்ட அணுகுண்டைச் சுமந்து செல்லும் வகையில வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ஏவுகணை, ஒரிசாவின் பாலாசூர் கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் 29 ஆவது முறையாக வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. இதுகுறித்து விஞ்ஞானி சிவதாணு பிள்ளை குறிப்பிடுகையில், பிரமோஸ் ஏவுகணை செங்குத்தாக இயங்கக்கூடியது. திரவ மற்றும் திட எரிபொருளால் இயங்கும் இந்த ஏவுகணை, ஒலியை விட அதிக வேகத்தில் பாய்ந்து செல்லக்கூடியது. ஏற்கனவே இந்த ஏவுகணை இராணுவத்திலும், கடற்படையிலும் பயன்பாட்டில் உள்ளது. நீர்மூழ்கிக் கப்பலிலிருந்தும், விமானத்திலிருந்தும் இயக்கக்கூடிய வகையில் தற்போது பிரமோஸ் ஏவுகணை தயாரிக்கும் பணி நடக்கிறது என்றார்.



இந்தியச் செய்திகள்

# தி.மு.க. முன்னாள் அமைச்சர் நேருவின் தம்பி படுகொலை



(திருச்சி)

தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் கே.என்.நேருவின் தம்பி ராமஜெயம் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளமை திருச்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருச்சி வட்டாரத்தில் முக்கிய தி.மு.க தலைவராக இருந்து வரும் நேரு மீதும், அவரின் தம்பிராமஜெயம் மீதும் தற்போதைய அ.தி.மு.க.வினஆட்சியில் பல நில மோசடி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், கைது செய்யப்பட்ட ராமஜெயம் பிணையில் விடுதலையாகி இருந்தார் நேற்றுக் காலை 6 மணிக்கு வழ்க்கம் போல உடற்பயிற்சிகளை மேற்கொள்ளச் சென்ற இவர் 9 மணியாகியும் வீடு திரும்பாத காரணத்தினால் அவரின் குடும்பத்தினர் பெரும் பரபரப்படைந்தனர். கைத்தொலை பேசியிலும் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை

இந்நிலையில், நேற்றுப் பிற்பகல் கிடைத்த தகவலை அடுத்துகை, கால்கள் கட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்த ராமஜெயத்தின் உடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். இவரின் உடலத்தில் சரமாரியாக கத்திக்குத்துக் காயங்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர.

ராமஜெயம் கொல்லப்பட்ட சம்பவம் திருச்சியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில், அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை, இப்படுகொலையைச் செய் தவர்களை கைது செய்ய மூன்று தனிப் படைகள் நியமிக்கப்பட்டுள்ளதாக திருச்சி மாநகர ஆணையாளர் சைலேஷ் குமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

# அனானின் சமாதானத் திட்டம் சிரிய எதிர்த்தரப்பு ஏற்க வேண்டும்

## வலியுறுத்துகிறது ரஷ்யா

ஐக்கிய நாடுகள் மற்றும் அரபுலீக்கின் இணை விசேட பிரதிநிதி கொபி அனானின் சமாதானத் திட்டத்தை சிரிய எதிர்த்தரப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஒரு வருடங்களுக்கும் அதிகமாக பஷார் அல் அசாத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையில், சிரியாவிற்கு ரஷ்யா தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்றது.

முரண்பாடுகளுக்குத் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சிரிய எதிர்த்தரப்பினர் தடையேற்படுத்துவதாகவும் ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.


யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதுடன், அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் நகரப் பகுதிகளில் இருந்து அரச படையினர் வாபஸ் பெறப்பட வேண்டுமென அனானின் சமானத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதேவேளை சிரியாவில் தொடர்ந்தும் அரச படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஹமா பகுதியில் தொடர்ச்சியாக 17 ஆவது நாளாகவும் இந்தத்தாக்குதல் நடத்தப்படுவதாக, மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான பொறுப்புடையவர்கள் தெரிவித்துள்ளனர்

# தீவிரவாதிகளின் தாக்குதல் அச்சம்; ஆப்கான் பாதுகாப்பு அமைச்சு மூடல்

(கராச்சி)



தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தப் போவதாக எழுப்பப்பட்ட வதந்தியை அடுத்து ஆப்கான் பாதுகாப்பு அமைச்சகம் 2 மணி நேரமாக மூடப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் உள்ளது. எனவே, அங்கு நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன. இந்த நிலையில், தலைநகர் காபூலில் உள்ள பாதுகாப்பு அமைச்சகம் அருகே வெடிகுண்டுகளுடன் கூடிய தற்கொலைப் படைத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் ஆடைகள் கிடந்தன.

இதுதொடர்பாக சுமார் 16 இராணுவ வீரர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில் செய்திகள வெளியாகின.

ஆனால் அதை பாதுகாப்பு அமைச்சகம் மறுத்தது. இந்தச் செய்தி ஆதாரமற்றது எனத் தெரிவித்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் திடீரென பாதுகாப்பு அமைச்சக அலுவலகம் 2 மணி நேரம் மூடப்பட்டது. இங்கு புகுந்து தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டது. இதை சில அதிகாரிகள் உறுதி செய்தனர். இருந்தும் இந்தத் தகவலும் வதந்தி என மறுக்கப்பட்டது. எதற்காக பாதுகாப்பு அமைச்சகம மூடப்பட்டது என்ற உண்மைத் தகவல் வெளியிடப்படவில்லை

# திட்டமிட்ட வகையில் சிறுவர்களை இலக்கு வைக்கும் சிரிய அதிகாரிகள்

## நவநீதம்பிள்ளை குற்றச்சாட்டு



சிரிய அதிகாரிகள் திட்டமிட்ட வகையில் சிறுவர்களை இலக்கு வைப்பதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை குற்றம் சுமத்தியுள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான சிறுவர்களின் விதி தொடர்பாக ஆழ்ந்த கவலை அடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத் உடனடியாக, பொதுமக்கள் கொல்லப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் சிரியாவின் பாதுகாப்புத் தரப்பினர் மேற்கொண்ட துஷ்பிரயோகங்கள் தொடர்பான விசாரணைகளை ஜனாதிபதி பஷார் அல் அசாத் எதிர்கொள்ள நேரிடும் என ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அரபு லீக் ஆகியவற்றின் இணைத தூதுவர் கொபி அனான் முன்வைத்த சமாதானத் திட்டத்தை சிரிய அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதி பஷார் அல் அசாத் இது தொடர்பில் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டுமென அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிரியாவில் நிலவும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் ஜனாதிபதி பஷார் அல் அசாத், தாக்குதலகளை நிறுத்துமாறு தமது படையினருக்கு உத்தரவிடவேண்டும் எனவும் சன நெரிசல் மிக்க பகுதிகளில் இருந்து படையினரை மீளப்பெறவேண்டும் எனவும அவர் தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்



கியூபாவிற்கு விஜயம் செய்துள்ள 16ஆவது போப்பாண்டவர் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ரோவை சந்தித்து கலந்துரையாடுவதனைக் காணலாம்.

## வர்த்தகத் தடைக்கு பாப்பரசர் கண்டனம்

கியூபாவிற்கு எதிரான 50 ஆண்டுகால அமெரிக்காவின் வர்த்தகத் தடைக்கு பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கியூபாவிற்கான விஜயத்தின் நிறைவில் தற்போதைய ஜனாதிபதி ராவுல் கஸ்ரோ முன்னிலையில், ஹவானா விமான நிலையத்தில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

கியூபா மக்களுக்கான நியாயமற்ற இந்தச் சுமை பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவி புரியாது எனவும் பாப்பரசர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாகிஸ்தான் இராணுவத் தளபதி; நேட்டோ அதிகாரிகள் சந்திப்பு

பாகிஸ்தான் இராணுவத் தளபதியை, அமெரிக்க மற்றும் நேட்டோ படையினரின் சிரேஷ்ட கட்டளைத் தளபதிகள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் எல்லை தாண்டி அமெரிக்கப் படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் 24 பாகிஸ்தான் படையினர் கொல்லப்பட்டிருந்தனர். இதனையடுத்து மேற்குலக நாடுகளுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த இராணுவ உயர்மட்டச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி ஆகியோர் சியோலில் சந்தித்துக் கலந்துரையாடியதை அடுத்து பாகிஸ்தான் இராணுவம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வொஷிங்டனுடனான எதிர்கால உறவுகள் குறித்த தேசிய பாதுகாப்புச் செயற்குழுவின் சிபாரிசுகளை பாகிஸ்தான் நாடாளுமன்றம் மீளாய்வு செய்து வருகின்றது.

பாகிஸ்தானின் வட மேற்கு பிராந்தியத்திலுள்ள ஆயுததாரிகளின் இலக்குகள் மீதான அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதல்களை நிறுத்துவது, மற்றும் ஆப்கானிஸ்தானிலுள்ள நேட்டோ படையினர்களுக்கான விநியோக மார்க்கங்களை மீளத் திறப்பது குறித்து இந்தச் சந்திப்பில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் அமெரிக்காவின் எல்லை தாண்டிய விமானத் தாக்குலை அடுத்து இந்த விநியோக மார்க்கங்களை பாகிஸ்தான் இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரண்டு வருடத்தின்பின் மூவருக்குத் தூக்கு

(டோக்கியோ)

பல படுகொலைகளைச் செய்த 3 பேர் நேற்றைய தினம் தூக்கிலிடப்பட்டதாக ஜப்பான் நீதித்துறை தெரிவித்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாக ஜப்பானில் எவரும் தூக்கிலிடப்படவில்லை. 2 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக நேற்றையதினம் 3 பேருக்கு தூக்குத் தண்டனையை ஜப்பான் நிறைவேற்றியுள்ளது.

டோக்கியோ, ஹிரோஷிமா, புகுவோகா சிறைகளில் அவர்களுக்கான தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஜப்பானில் தற்போதைய கணக்கீட்டின்படி 132 கைதிகளுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தண்டனையை எதிர்நோக்கி சிறையில் காத்திருக்கின்றனர்

# அணு ஆயுதத் தயாரிப்பு; பேச்சு நடத்தத் தயார்



(தெஹ்ரான்)

அணு ஆயுதங்கள் தயாரிப்பது குறித்து வல்லரசு நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாரென ஈரான் அறிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் வெளிவிவகாரத் துறை அமைச்சர் அலி அக்பர் சலே செய்தியாளர்களிடம் கூறியதாவது, ஈரான் வல்லரசு நாடுகளுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருக்கிறது.

இந்தப் பேச்சுவார்த்தை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி நடைபெறலாம். மேலும் துருக்கி பிரதமர் ரீசெப் தைப்பி ஈர்டோஜன் இருநாள் பயணமாக ஈரான் வரவிருக்கிறார். இவர் அணு சோதனை முறைகளை பார்வையிடலாம் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே ஈரானுக்கான அணு சக்தி ஆலோசகர் சையத் ஜலில் கூறுகையில், பேச்சுவார்த்தை எங்கு எப்போது நடத்துவது எனவும், ஒப்பந்தம் கையெழுத்திடுவது குறித்தும் விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் எனக் கூறினார்.

# சவுதி இராஜதந்திரி ஏமனில் கடத்தல்

சவுதி அரேபிய இராஜதந்திரி ஒருவர் ஏமனில் வைத்து கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தென்பிராந்தியத்திலுள்ள ஏடன் நகரில் உள்ள அவரின் வீட்டிற்கு வெளியே வைத்து சவுதி அரேபிய துணைத் தூதுவர் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

அப்துல்லா அல் காலிதியை ஆயுததாரிகள் வாகனமொன்றில் கடத்திச் சென்றுள்ளதாக மன்சூடா மாவட்ட பொலிஸாரை மேற்கோள்காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

சவுதி அரேபிய துணைத் தூதுவரை மீட்பதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்புத்தரப்பினர் மேற்கொண்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவித்தன.

ஏடன் நகருக்கு அருகிலுள்ள, அப்யான் மாகாணத்தில் அல்-கொய்தா ஆயுததாரிகளுடன் தொடர்புடைய ஆயுதக் குழுக்களைக்கட்டுப்படுத்த பாதுகாப்பு தரப்பினர் போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்படவுள்ளன

## யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரிவிப்பு

(கிருசானந்)


யாழ்.மாவட்டத்தில் இன்னமும் ஐந்து சதுர கிலோ மீற்றர் பரப்பளவு நிலப்பரப்பிலேயே கண்ணி வெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் அகற்றபட வேண்டியுள்ளதாக யாழ்.மாவட்ட மிதி வெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்;

தற்போது ஒரு சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பில் மிதிவெடி அகற்றும் பணிகள் நடை பெற்று வருகின்றன, 2002ஆம் ஆண்டு தொடக் கம் இதுவரையில் 89.1 வீதமான பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

ஹலோ ட்றஸ்ற், டி.டி.ஜி நிறுவனத்துடன் இரா ணுவப் பொறியியல் பிரிவினரும் இணைந்து இந்த மிதிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருவதுடன் இரா ணுவப் பொறியியல் பிரிவினரால் கிளாலிப் பகுதி யில் மிதிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ளன. தற்போது முகமாலை தொடக்கம் யாழ்ப்பாணம் வரையில் வீதி அகலிப்புப்பணிகளுக்காக ஏ-9 வீதி யின் இரு மருங்கு மற்றும் ரயில் பாதைகளில் மிதிவெடி அகற்றும் பணிகள் மிக துரித கதியில் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் முன்னர் உயர்பாதுகாப்பு வலயமா கக் காணப்பட்ட காங்கேசன்துறை சீமெந்துத தொழிற் சாலைப் பகுதி, நாகர் கோவில் பகுதி, கிளிநொச்சி பச்சிலைப்பள் ளிப் பிரதேசம் ஆகியவற்றில் மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடி பொருட்களை அகற் றும் நடவடிக்கைகளில் ஹலோ ட்றஸ்ற் நிறுவனம் ஈடுபட்டுவருகிறது.



இதேவேளை, நாகர் கோவில் பகுதியில் அனைத்து திசைகளிலும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட் டுள்ளதாகவும், இதனை விரைவில் அகற்றுவதற்கு போதியளவு தொழில்நுட்ப வசதிகள் இன்மை யால் 5 தொடக்கம் 6 வருடம் வரையில் கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்து டி.டி.ஜி நிறுவனமானது தெல்லிப் பளை மற்றும் பூநகரிப் பிரதேசங்களில் கண்ணி வெடிகளை அகற்றி வருவதாகவும் இலங்கை யின் மிதிவெடி அகற்றும் ஒரே ஒரு நிறுவனமான டாஸ் (das) நிறுவனமும் கிளிநொச்சி கண்டா வளைப் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் கூறினார். (சி)

# யாழில் வேலை செய்யும் பெண்களில் 60 வீதம் திருமணமாகாதவர்கள்

## யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் தெரிவிப்பு



(கிருசானந்,சுகன்யா)

யாழில் வேலை செய்யும் பெண்கள் தொடர்பாக 5 பிரதேச சபைகளுக்கிடையில் 105 வினாக் களைக் கொண்டு மேற்கொள் ளப்பட்ட ஆய்வுகளில் க.பொ.த சாதாரண தரம்வரை கல்வி கற்ற திருமணம் ஆகாத 60 வீதமான பெண்கள் வேலை செய்கின்றார்கள் என யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் உதயநிதி நவரட்ணம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்ற சர்வதே மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, கோப் பாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போதே யாழில் வேலை செய்யும் பெண்களில் 50 வீதமானவர்கள் ஊழியர் சேமலாப நிதியினைப் பெறுவதற்கான பதிவுகள் எதனையும் மேற்கொள்ளா தவர்களாகவும் 20 வீதமானவர்கள் ஊழியர் சேமலாப நிதிபற்றி அறிந்திருக்கவில்லை எனவும், 18 வீதமானவர்கள் பிரசவகாலத்தி லும் சலுகைகளைப் பெறுபவர்கள் என்றும் 25 வீதமானவர்கள் மட்டுமே பெண்கள் தொடர்பான சட்டதிட்டங்களை அறிந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். வேலைசெய்யும் பெண்களில் அதிகமான வர்கள் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்பவர்கள் எனவும் இதில் அதிகமானவர்கள் யாழ்.மாவட டத்தை வதிவிடமாக கொண்டவர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (சி)

# குவிந்து கிடக்கும் குப்பைகள் துர்நாற்றம் வீசுவதாக விசனம்

(றுஷான்)

யாழ்ப்பாணம்- திருநெல்வேலிச் சந்தியையும், கொக்குவில் சந்தியையும் இணைத்து யாழ். மருத் துவபீடம் ஊடாகச் செல்லும் ஆடியபாதம் வீதி யிலுள்ள சந்தியில் பெருமளவு குப்பைகள் கொட்டப் பட்டுக் காணப்படுகின்றது.

நல்லூர் பிரதேசசபையினரால் குப்பைகளைச் சேகரிப்பதற்கென ஒதுக்கப்பட்ட பகுதி என்று குறிப்பிடப்படும் இந்த இடத்தில் பெருமளவு குப்பைகள் குவிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பகுதி துர்நாற்றம் வீசி அசிங்கமாகக் காணப்படுகிறது.

இந்த இடத்தில் கொட்டப்பட்டிருக்கும் குப்பை கள் சில சமயங்களில் வீதிக்குக் குறுக்காகவும் சிதறிக் காணப்படுவதால், ஆடியபாதம் வீதியூடாகப் போக்குவரத்திலீடுபடும் வாகனங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதைக் காண முடிகிறது.

இதேபோல், ஆடியபாதம் வீதியில், திருநெல் வேலிச் சந்தைக்குப் பின்புறமாகச் செல்லும் பாட சாலை வீதியும், நாவலடி வீதியும் சந்திக்கும் இடத்திலும் குப்பைகள் பெருமளவில் கொட்டப் பட்டுக் காணப்படுகின்றன.



இதிலும் குப்பைகள் பெருமளவு சிதறி ஒழுங்கை முழுவதும் பரவிக் கிடப்பதால், அந்தப் பாதை ஊடான போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவ துடன், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக வும் பிரதேச மக்கள் கூறுகின்றனர். (சி)



இது வெங்காய அறுவடைக் காலம். பெருமளவு விவசாயிகள் இம்முறை வெங் காயச் செய்கையில் ஈடுபட்டு அறுவடையில் ஈடுபட்டு வருவதால், அதிகளவு பெண் களுக்கு நாட்கூலி தொழில்வாய்ப்புக் கிடைத துள்ளது.

இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட வெங் காயங்களை அறுத்துப் பொதியிடும் யாழ் கலட்டிப் பகுதியில் அமைந்துள்ள ஒரு களஞ சியசாலையில் பணியாற்றுவதற்காக திரு நெல்வேலி பகுதியிலிருந்து உழவு இயந் திரம் ஒன்றில் புறப்பட்டிருக்கும் பெண்கள்... (சி)

# பதிவிறக்கப் பெட்டகம்

சலனமற்ற குளத்து நீரில்
கல்லெறிந்து போனவள்
நீ.
இன்னும்
அல்லாடிக்
கொண்டிருக்கிறது
பரிதாபத்துக்குரிய என் பிம்பம்.
– பாரதிவாசன்

ஓராற்றான் என் கண்
இமைபொருந்த அந்நிலையே
கூரார் வேல் மாறன்
என் கைப்பற்ற –வாரா
நனவென் றெழுந்திருந்தேன்
நல்வினை யொன்றில்லேன்
கனவும் இழந்திருந்த வாறு!
– முத்தொள்ளாயிரம்

துயிலழகி ஊடி நின்றாள்
எரிக்கும் வெயிலதனில்
துடிக்கும் என்பிலதாய்
இப்படியும் அப்படியும்
தவிதவித்து மயங்கியபோது
உலகத்துப் பெண்ணெல்லாம்
அணங்காகி வெறியூட்ட
விழித்துயிர்த்து மயங்கியோர் கணம
கழித்து விழித்து உயிர்த்து
நரகம்
பெரு நரகம்.
– சி.மணி

என்போல்
நீயுமாகி
விடக்கூடாதென்றுதான்
சொல்லாமல்
வைத்திருக்கிறேன்
உன்னிடம் கூட
என் காதலை.
– யுகபாரதி

அவளால் என்
மனம் உடைந்ததன்றி
வேறு அதிகமாய்
ஒன்றும் சேதமில்லை.
– கஜல்

குனிசிலைப் புருவ, வாட்கனண்
கொடியிடை, கரிய கூந்தல்
கனியிதழ்ச் சிறுவெண்மூரல்
காரிகை நலத்தை நாடி
நினைவும் நித்திரையும் போக்கி
நீடொடு குழியினார்ந்த
நனிமதக் களிறு போன்று
வேட்கையி னடுங்கினாரால்.
– சீறாப்புராணம்

புதுவோன் பின்னைப்
போனது என் நெஞ்சம்
இதுவோ அன்னாய்!
காமத்து இயற்கை?
– சாத்தனார்

என் காதலால் உனக்கு
எவ்விதத் தொல்லையும்
உண்டாகாத வண்ணம்
உன்னை நான்
அப்படிக் காதலிப்பேன்.
இணைபிரியாது எந்நேரமும்
உன்னுடன் ஒட்டிக்கொண்டு
ஓர் இதயம் இயங்குகிறது
என்பதைத் தவிர.
– டொஸ்ரோயெவ்ஸ்கி

என்னைப் பார்த்தது போலவே
எல்லா இளைஞனையும் பார்
எல்லோரையும் காதல்வசப்படுத்து
கனவில் மிதக்க விடு
மதி மயக்கு
விழிகளால் விளையாடு
“யான் பெற்ற துன்பம்
பெறுக இவ் வையகம்”
– குவளைக்கண்ணன்

உன்னைச் சூழ்ந்திருப்பவை
உன்னைத் தொடுபவை
உன்னால் தொடப்படுபவை
உனக்கு மகிழ்ச்சி தருபவை
உன்னைச் சிந்திக்க வைப்பவை
எல்லாம் நலம் பெறுவதாகுக.
– பவுஸ்தோல்ஸ்கி

கயலெழுதி வில்லெழுதிக்
காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்த முகம்
திங்களோ காணீர்!
– கானல்வரி

அண்ணல் அவன்தன் மருங்கே
அளவிறந்த காதலினால்
உண்ணிறையும் குணம் நான்கும்
ஒருபுடைச் சாய்ந்தன.
– திருத்தொண்டர் புராணம்

எனக்கிருப்பதெல்லாம்
ஒரே ஒரு ஆசைதான்
அடுத்த பிறவியில்
நான் நீயாக வேண்டும்
நிறைய பழிவாங்க வேண்டியிருக்கிறது
நானாகும் உன்னை.
– கவிபாரதி

உன் நினைவின் வாசனை
அரிக்கிறது
இமைகளின் வரப்பை.
– குட்டிரேவதி

கவிதாவையும்
முருகானந்தத்தையும்
நான்தான்
காதலிக்க வைத்தேன்
அது ஒரு சின்னக் கதை
அவர்களது ஊடல்களையும்
நான்தான்
தீர்த்து வைக்கிறேன்
உள்ளுக்குள் ஒரு
சைத்தான் புலம்புகிறது
கவிதாவை நீ காதலித்திருக்கலாம்!
– கே.சாரதி

காத்திருக்கும்
பொழுதுகளில்
உதிரும்
இலைகளிலும்
உன்
காலடி
ஓசை.
– அறிவுமதி


எத்தனையோ இருக்கின்றன
எனக்கு அமையாமல்
வேலை
வீடு
கவிதை
அத்துடன்
நீயும்.
– ஆசாத்

தண்டவாளத்தில்
தலைசாய்த்துப் பூத்திருக்கும்
ஒற்றைப் பூ
என் காதல்.
நீ நடந்து வருகிறாயா
ரயிலில் வருகிறாயா?
– பழனிபாரதி

# விவசாய உற்பத்திகளுக்கு நியாயமான கழிவு வேண்டும்

## விவசாயிகள் கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளில் விவசாயிகளால் சந்தைப்படுத்தப்படும் பொருட்களுக்கான கொள்வனவின் போது தீர்மானிக்கப்படும் கழிவின் அளவு குறித்து இன்றைய வலி.தெற்குப் பிரதேச சபையின் கூட்டத்தில் முடிவுசெய்யப்படவுள்ளது.

நேற்று உடுவில் பிரதேச செயலகத்தில் ஈ.பி.டி.பி. நாடாளு மன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற உடுவில் பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இவ்விடயம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்ட போதே வலி.தெற்குப் பிரதேச சபையினர் இத்தத் தகவலைத் தெரிவித்தனர்.

இவ்விடயம் குறித்துக் கருத்துத் தெரிவித்த அபிவிருத்திக் குழுத் தலைவர் மு.சந்திரகுமார் சுன்னாகம், மருதனார் மடம் சந்தைகளின மூலமாகக் குறித்த பிரதேச சபைக்கு கிடைக்கின்ற வருமானம் அதிகம். அதனைத் கருத்தில் எடுத்து விவசாயிகளைத் திருப்திப் படுத்தும் வகையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விவசாய விளைபொருட்களுக்கு கழிவுகள் தீர்மானிக்கப் பட வேண்டும் என்று தெரிவித்தார்.

அதேவேளை தம்புள்ள போன்ற இடங்களிலுள்ள சந்தைகளில் எமது விளைபொருட்கள் கழிவு இல்லாமல் சந்தைப்படுத்தப்படுவதாகவும் விவசாயிகளினால் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

அவ்வாறான நிலையில் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக்கு விவசாய பொருட்கள் வருவது குறைந்துவிடும் இதனால் பாதிக்கப்படுவது குறித்த பிரதேச சபையே. எனவே இந்தப் பகுதி விவசாயிகளின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கான கழிவு நிர்ணயத்தினை மிகவும் கவனமெடுத்து மேற்கொள்வது அவசியம் எனவும் அவர் குறித்த பிரதேச சபையினரைக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்த 10 வீத கழிவு குறித்தும் தமக்கு உடன்பாடு இல்லை எனவும் மு.சந்திரகுமார் மேலும் குறிப்பிட்டார். (பா)

# எமக்கு மின்சாரம் வேண்டும் கரைத்துரைப்பற்று மக்கள் போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரைத்துறைப் பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராம மக்கள் தமக்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரி நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இக்கிராமத்திற்கு மின்சார விநியோகத்தை பெற்றுத்தருமாறு கோரியும் முறைகேடான முறையில் மின்சாரம் வழங்கப் படுவதைக் கண்டித்தும் இக்கிராமத்திலுள்ள 60 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின் பாவனையாளர் சேவை நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட டனர். மின்சார விநியோகத்திற்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யாதவர்களுக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ள நிலையில் அவற்றைப் பூர்த்தி செய்த தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை எனவும்

மீள்குடியேறிய பல்வேறு கஷடங்களின் மத்தியில் வாழ்ந்து வரும் நிலையில் தமக்கான மின்சார இணைப்பு விரைவில் வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கையை வைத்து இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (04)

# காப்பெற் இடப்பட்டு வீதிகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடிப் பகுதியிலிருந்து கிழக்கே கண்டி வீதிவரையுள்ள ஆஸ்பத்திரி வீதியின் கிழக்குப் பகுதி திருதப்பட்டு காப்பெற் வீதியாக நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வருகிறது. வீதிகளை மறுசீரமைக்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ் வீதிக்கான காப்பெற் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வீதி அபிவிருத்தி அதிகார சபையால் யாழ். வைத்தியசாலையின் முன்பகுதி நவீன சந்தைப் பகுதியில் உள்ள இருவழிப் போக்குவரத்துப் பாதையும் • சத்திரசந்திப் பகுதி வரையான வீதியும் காப்பெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. (23)




புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில் ஒரு தொகுதியினர் ஒருவருட கால தொழில்நுட்ப கற்கை நெறியினை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துக்கொள்வது குறித்தும் புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. இந்த விடயம் சம்பந்தமாக கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் தலைமையில் இப் பயிற்சிக் கலாசாலை சார்ந்த தூதுக்குழுவினர் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மீண்டும் முன்னைய பயிற்சிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து தரும்படி ஆளுநரிடம் கோரப்பட்டது. இக் கலாசாலை அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இருப்பதாலும், பலாலி விமான நிலையத்திற்கு மிக அண்மித்து இருப்பதாலும் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அக்கலாசாலையில் பயிற்சிகளை மீண்டும் நடாத்த முடியாத சூழ்நிலை இருப்பதால் [illegible]னை நடாத்துவதற்கு பலாலியில் உள்ள வேறு இடத்தினை தெரிவுசெய்தால் அங்கு நிரந்தர கட்டடத்தை அமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களினது உதவியைப் பெற்றுத் தரமுடியுமென ஆளுநர் உறுதியளித்துள்ளார்.

மேற்படி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், கிறிஸ்தவம் ஆகிய பாடநெறிகளைத் தரம் வாய்ந்தவையாக வழங்க வேண்டுமெனவும கேட்டுக்கொண்டார்.

அதுவரை இப்போது பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இயங்கிக்கொண்டிருக்கும் இடத்திலேயே மேற்படி பாடநெறிகளை ஆரம்பித்து நடத்தும்படியும் கேட்டுக்கொண்டார்.

முக்கியமாக பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையை மூடுவதற்கான எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லையெனவும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இக் கலாசாலையை மீள நிறுவுவதற்கு ஒரு பொருத்தமான இடத்தைப் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அண்மையில் தெரிவுசெய்வதற்குத் தன்னாலான உதவிகளை வழங்குவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

இச் சந்திப்பில் பலாலி ஆசிரிய கலாசாலையை தொடர்ந்து நடாத்துவதற்கான ஆலோசனையும் ஆக்கமும், ஊக்கமும் அளித்தமைக்காகவும், கட்டடம் கட்டித் தருவதற்கான உதவி வழங்குவதாக உறுதியளித்தமைக்காகவும் இத் தூதுக்குழுவினர் ஆளுநருக்கு நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

## சுவீகரித்த காணிகளுக்கு...

சுவீகரித்தமை குறித்தும் சுவீகரிக்கப்பட்ட காணிக்கான இழப்பீடுகளை இதுவரை செலுத்தாமை குறித்தும் பயன்தரும் மரங்களான தென்னை போன்ற மரங்களை அனுமதியின்றித் தறித்தமை தொடர்பாகவும் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் பொதுமக்கள் பலரால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தின் பிரதான போக்குவரத்துப் பாதையான ஏ - 9 வீதி, மிருசுவில் பகுதி ஆகியவற்றில் மக்களின் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான சரியான இழப்பீடுகள் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் பொதுமக்கள் தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் .இந்த விடயம் தொடர்பாக மேலும் ஆராய வேண்டியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா.விற்கு பதிலளிக்க...

பத்திரிகையாளர் வினவியபோதே லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார். படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸில் தீர்மானம் வலியுறுத்துகிறது. ஆனால் எல்.எல்.ஆர்.சி.யின் பரிந்துரைகள் வருவதற்கு முன்பாகவே கூட அப்பரிந்துரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பல நடவடிக்கைகளை அமுல்செய்ய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று யாப்பா தெரிவித்தார்.

படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் அரசாங்கம் தனது உத்தியோகபூர்வ பதிலை இதுவரை மனித உரிமை பேரவைக்கு வழங்கியிருக்கவில்லை என்றும் எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துவருவதாகவும், அப்பரிந்துரைகளை செயற்படுத்துவதில் இலங்கைக்குப் பொருத்தமான ஒரு வழி முறைகையாளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## உறங்கும் பேருந்...

புதிய பேருந்துகள் வழங்கப்பட்டு வரும் அதேவேளையில், வடபகுதியில் உள்ள எந்தவொரு சாலைக்கு இதுவரையில் புதிய பேருந்துகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## தூள் கிளப்புகிறது...

தெரிவித்துள்ளனர். இதனையடுத்து, அங்கு வருகைதந்த குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர், குறித்த நபர்களை விசாரித்தபோது சரியான தகவல்களை அவர்கள் வழங்கவில்லை எனவும், அதன் பின்னர் அவர்களிடம் சோதனை நடத்தியபோது ஒருதொகை ஹெரோயின் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், கைதான மூவரில் ஒருவர் யாழ். நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கோடிக்கணக்கில்...

குறிப்பிடத்தக்கது. பெ.கனகசபாபதி தலைமையிலான நெறியாளர் குழு பதவிக்காலத்தில் நடைபெற்ற இலட்சக்கணக்கான மோசடிகளைத் தொடர்ந்து மேற்படி நெறியாளர் குழு கடந்த ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தது. இது தவிர, ப.நோ.கூ.சங்கத்திற்குச் . சொந்தமான ஆதனங்களை விற்று மோசடிகள் செய்ததாகவும் கனகசபாபதிக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருவதாக அறியப்படுகிறது.

இம் மோசடி நடைபெற்றிருந்த காலத்தில், அரசாங்கம் ஏ-9 நெடுஞ்சாலையை மூடி அத்தியாவசிய பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவருவதைத் தடுத்த காரணத்தால் பலர் பட்டினியில் சாவதாக தமிழ் ஊடகங்களில் பிரச்சாரப்படுத்தப்பட்டு வந்திருந்தது பலரிற்குத் தெரிந்திருக்கும்.

## புலிகள் அனைவருக்கும்...

பட்டுள்ளதாகவும் 2012 ஆம் ஆண்டு மத்தியில் அனைத்து முன்னாள் போராளிகளும் விடுவிக்கப்படுவர் எனவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தினேஸ் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு புதிய கடன் திட்டமும் நேற்று அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. புதிய கடன் திட்டத்தின்படி ஆகக்கூடிய 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். இவர்களுக்கு 4 சதவீத வட்டியே அறவிடப்படும். முதல் வருடத்தில் வட்டி மாத்திரமே அறிவிடப்படுவதுடன் எதிர்வரும் 10 ஆண்டுகளுக்குள் இவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியும்.

சுன்னாகம் சபை, யாழ்ப்பாணம்



## போதையில் நின்று தீ வைத்த இளைஞன்

(வடமராட்சி)

உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் உள்ள நாச்சிமார் கோவில் வாசலில் மதுபோதையில் நின்ற இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை தீயிட்டுக் கொழுத்தியுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸார் குறித்த இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

## போராட்ட இயக்கம் கட்சியாக மாறியது

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து பிரிந்து சென்ற கிளர்ச்சிக் குழுவினர் தங்களை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யத் தேர்தல் செயலகத்தில் விண்ணப்பித்துள்ளனர். மக்கள் போராட்ட இயக்கம் என்ற பெயரில் செயற்பட்டு வந்த இவர்கள் முன்னணி சோஷலிச கட்சி என அரசியல் கட்சியாக உருவெடுத்துள்ளனர்.

## வதிவிட உரிமைக்கான திருமணம் தடை

(பிரிட்டன்)

பிரிட்டனில் இவ்வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காக செல்லும் விளையாட்டு வீரர்கள், பயிற்றுநர்கள் மற்றும் அதிகாரிகள் அங்கு திருமணம் செய்துகொள்வதை பிரித்தானிய அதிகாரிகள் தடை செய்யவுள்ளனர். வெளிநாட்டவர்கள் பிரிட்டனில் வதிவிட உரிமை பெறுவதற்காக ஒலிம்பிக் போட்டிகளை பயன்படுத்துவதை தவிர்ப்பதே இதன் நோக்கமாகும்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின்போது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியிலுள்ள நாடுகளைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரம் பேருக்கு 6 மாத காலத்திற்கான பிரித்தானிய விசா வழங்கப்படவுள்ளது. எனினும் அவர்கள் திருமணம் மற்றும் வேறு வகையான சிவில் வாழ்க்கை பந்தங்களில் இணைவது தடுக்கப்படும். அத்துடன் பிரிட்டனில் கல்வி கற்பதற்கு விண்ணப்பிப்பதும் தடுக்கப்படவுள்ளது. சட்டவிரோத குடியேற்றவாசிகளும் பயங்கரவாதிகளும் பிரிட்டனை இலக்கு வைப்பதற்கு ஒலிம்பிக்கை பயன்படுத்தலாம் என்ற கருத்துக்களின் மத்தியில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## இலட்சியத்துடன் பயின்றவர் அமரர் றெஜினோல்ட் எல்ரன்



(பருத்தித்துறை)

ஒரு இலட்சியத்துடன் கல்வியைப் பயின்ற அமரர் எல்ரனின் அகால மரணம் கட்டைக்காட்டு பகுதி மக்களுக்கான, உறவினருக்குமான இழப்பு மட்டுமல்ல, வடமராட்சி கிழக்கிற்கு பெரும் வீழ்ச்சி என ஈபிடிபி. வடமராட்சி அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பிரிவு இறுதியாண்டு மாணவனான அந்தோனிப்பிள்ளை றெஜினோல்ட் எல்ரனின் அஞ்சலி நிகழ்வில் இரங்கல் உரையாற்றும் போது தெரிவித்தார்.

கடலுக்கு குளிக்கச் சென்ற சமயம் அகால மரணமடைந்த வடமராட்சி கிழக்கு, முள்ளியான், கட்டைக்காட்டைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை றெஜினோல்ட் எல்ரனின் இறுதி அஞ்சலி நிகழ்வு வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கட்டைக்காடு பொது மண்டபத்தில் இடம்பெற்றது. அங்கு இரங்கல் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் இரங்கல் தெரிவிக்கையில், தான் ஒரு கல்வியாளனாக வரவேண்டும், எமது சமூகம் கல்வியில் உயர வேண்டும். தனது பிரதேசம் அபிவிருத்தி காண வேண்டும் என ஒரு இலட்சியத்துடன் கல்விப் பயணத்தை தொடர்ந்துள்ளார். அவர் ஆங்கிலம், சிங்களம், பிரெஞ் மொழி ஆகியவற்றை மிகவும் சரளமாகப் பேசக் கூடிய திறமைசாலி. அவருடைய சிந்தனைகள் ஒரு கல்வியாளனுக்கு இருக்க வேண்டிய சகல ஆற்றலையும் பண்புகளையும் கொண்டிருந்துள்ளது. எனவே அமரர் எல்ரனின் எதிர்பார்ப்புக்களை, கனவுகளை நனவாக்குவதே நாம் அவருக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாகும் எனத் தெரிவித்தார்.

பல மாணவத் தலைவர்களின் அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து, பூதவுடல் கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்றது. அதன் பின்னர் சென். மேரிஸ் சேமக்காலையில் 5.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அமரர் எல்ரன் அன்று விடுவிக்கப்படாத பகுதியான கட்டைக்காட்டிலிருந்து மிகவும் துணிச்சலுடன் கடலில் கட்டு மரத்தில் வலித்து வலித்து வந்து பின்னர் நீந்தி பருத்தித்துறை கரையை வந்தடைந்து இராணுவத்தினரிடம் தஞ்சம் புகுந்து, தனது நிலையை விளக்கி, பின்னர் பல்கலைக்கழகம் சேர்ந்து தொடர்ந்து கல்வி கற்று வந்த ஒரு இலட்சிய மாணவன் என அவரது உறவினர்கள் சொல்லி அழுவதைக் கேட்டு, சக மாணவ மாணவிகளும் கதறியழுதது, பார்ப்போரின் நெஞ்சத்தையும் நெகிழ வைத்தது.

## மாநகர சபைக் கூட்டத்தில் கோமகன் உரையாற்றினார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் நேற்றைய மூன்றாவது மாதாந்தக் கூட்டத்திற்கு 19 மாதங்களுக்கு மேலாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்.மாநகர ஆளும் கட்சி உறுப்பினர் முருகையா கோமகன் சிறைக் காவலர்களினால் அழைத்து வரப்பட்டுச் சபை அமர்வுகளில் கலந்து கொண்டார்.

யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு மாதாந்தப் பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது.

இந்தச்சபை அமர்வின்போது முருகையா கோமகன் தனது நிலை குறித்துச் சபை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்ற அனுமதி கோரியதன் பேரில் அவருக்கு முதல்வர் உரையாற்ற அனுமதி அளித்தார்.

அவர் தனது உரையில், தன்னைச் சிறையில் தடுத்து வைத்திருப்பதும் மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணியில் தடையை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தார். மேலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான பிரேரணை ஒன்றையும் சபையில் சமர்ப்பித்தார். (பா)

## ஆடம்பர வீட்டில் கஞ்சா மீட்பு

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பேரில் கனேமுல்ல புருகஹகொட பிரதேசத்தில் ஆடம்பர வீடொன்றைச் சுற்றி வளைத்த போது 44 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், குறித்த வீட்டில் வசித்து வந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

## பாலியல் துஷ்பிரயோகம் அதிபர் கைதானார்

(கொழும்பு)

பாலியல் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் மாரவில பிரதேச பாடசாலை அதிபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய சந்நுதப்பட்ட பாடசாலை அதிபர் நேற்றுப் பகல் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். பாடசாலை அதிபரால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஐந்து மாணவிகள் மேலதிக பரிசோதனைக்காக மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சுமார் பத்து வயதான பாடசாலை மாணவிகளே அதிபரினால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

## சிறுமியைச் சுட்ட மூவர் கைது

(லண்டன்)

பிரித்தானியாவில், கடை ஒன்றில் வைத்து 5 வயதுடைய இலங்கைத் தமிழ் சிறுமி ஒருவர் சுடப்பட்டமை தொடர்பில், மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துஷா கமலேஸ்வரன் என்ற குறித்த சிறுமி, கடந்த வாரம் சுடப்பட்டார். இந்த காட்சிகள், அங்கிருந்த இரகசிய ஒளிப்பதிவு கருவியில் பதிவாகி இருந்தன. இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் இது தொடர்பில் மூன்று பேரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்படும் பட்சத்தில். அவர்கள் மூவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## 2500 போத்தல் சாராயம் மீட்பு

(கொக்குவில்)

உரிய ஆவணங்கள் எதுவுமின்றி கொக்குவில் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2500 போட்டல் சாராயம் யாழ் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தலைவலை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவருகின்றது. (எஸ்)

## இன்று ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றின் உடைமையில் இருக்கும் இரண்டு வாகனங்கள் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளது.

நீதிமன்ற வளாகத்தில் இன்று காலை இடம்பெறும் இவ் ஏல விற்பனையில் WP-HU 5085, WP-JZ 9354 ஆகிய வாகனங்களே விற்கப்படவுள்ளன என நீதிமன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (04)

## நீண்ட காலத்திற்குப் பின் கொழும்பில் வர்த்தக கண்காட்சி



(கொழும்பு)

இலங்கை உற்பத்திகளுக்கு சர்வதேச சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஸ்ரீலங்கா எக்ஸ்போ 2012 சர்வதேச கண்காட்சியின் இரண்டாவது நாளான நேற்று பிரதமர் தி.மு. ஜயரத்தன திறந்துவைத்தார். கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அடங்கலான 5 அமைச்சுக்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன. இந்த கண்காட்சியில் 300க்கும் அதிகமான இலங்கை உற்பத்தியாளர்களின் சுமார் 400 கடைத் தொகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கண்காட்சியைத் திறந்து வைத்த பிரதமர், மூன்று தசாப்தங்களாக நாட்டில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இலங்கையின் சர்வதேச வர்த்தகத்துறை வீழ்ச்சியடைந்தது.

1997 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்போதுதான் இவ்வாறான சர்வதேச வர்த்தக கண்காட்சி முதன்முறையாக நடைபெறுகின்றது. நாட்டில் இன்று நிரந்தர அமைதி ஏற்படுத்தப்பட்டிருப்பதன் காரணமாகவே இவ்வாறான நிகழ்வுகள் நாட்டில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. கண்காட்சியில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி, ரிசாத் பதியுதீன் ஆகியோர் உட்பட பல அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

## பொலிஸ் நிலையங்கள் அதிகம் வேண்டும்

சர்வதேச நாடுகள், இலங்கையில் நீதி இல்லை என முன்வைக்கின்ற குற்றச்சாட்டுகளை இல்லாது செய்வதற்கு, நாடு முழுவதும் பொலிஸ் நிலையங்களை அதிகரிக்க வேண்டும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அனுராதபுரம் கஹட்டகஸ்திகிலிய பகுதியில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றும் போது, அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அதனை இல்லாது செய்வதற்கு நாடு முழுவதும் பொலிஸ் நிலையங்களை அதிகரிக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## பிறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது

(கொழும்பு)

யுத்த காலத்தில் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து மீண்டும் நாடு திரும்பிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் திட்டம் தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், வவுனியா மாவட்டத்தில் உள்ள 196 பிள்ளைகளுக்கு நேற்று பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம் சாள்ஸ் உள்ளிட்ட மேலும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர். 2007 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய ஆயிரத்து 200 பிள்ளைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.